
"காட்சி நிலையும்"!
"சாட்சி நிலையும்"!!
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# “காட்சிநிலையும்”! “சாட்சி நிலையும்”!!

# பொருளடக்கம்


1. உணர்வின் ஒடுங்குதலும் உணர்ச்சியின் வெளிப்பாடும்---------1

௨.. நாமரூபத்தின் விளக்கம்------------------------------------------௯

௩. நம்பினார் கெடுவதில்லை-----------------------------------------1௯

௪. ஓர் உண்மை-----------------------------------------------------௨௯

5. புத்தாண்டு வாழ்த்துக்கள்------------------------------------------௪௨

6. குளித்த பிறகு செய்யும் பிரார்த்தனை----------------------------௪௩

7. குருபூர்ணிமா செய்தி----------------------------------------------௪௪

௮. காட்சி நிலையும் சாட்சி நிலையும்---------------------------------௪௮


எல்லாம் நீ!



(ஸத்திய வாக்கை)

ஸத்தியம் பேசு. தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

ஸத்தியம் பேசினால் தர்மம் நிலைபெறும்.

ஸ்ரீராம்; ஜெயராம்; ஜெய ஜெய ராம்; ஓம்!!!

அகம் பிரம்மம், ஜகம் பிரம்மம், அகமே எல்லாம்!

ஜகம், பரம், ஜீவர்கள், சிறிதும் இல்லை!!

உணர்வின் ஒடுங்குதலும்; உணர்ச்சியின் வெளிப்பாடும்!

ஓம் அருள்ஞானக் குழந்தைகளே!

பிறரை அடக்காமல் நாம் மட்டும் அடங்கி இருப்பதனால் ஆன்ம உணர்வு பெற்று, புற உணர்ச்சிகள் கெட்டு ஸ்வய ஞானானுபவம் பெறுவீர்களாக.

1. உணர்வின் ஒடுங்குதல்:— உடல் உலக உணர்வாக இருக்கும் போது அது "உணர்ச்சி" யென சொல்லப்படுகிறது. தெய்வீக உணர்வாகவும், பர உணர்வாகவும் இருக்கும் போது அதை "மெய்யுணர்வு" என சொல்லப்படுகிறது. ஓர் சாதனையாளன் முதலில் தெய்வீக உணர்வை அவஸ்யம் பெறவேண்டும். இந்த தெய்வீக உணர்வு பெற்று அது முதிர்ச்சியானால் தான் பர உணர்வு பெருகும். இந்த தெய்வீக உணர்வு பெறுவதற்கு முதலில் உடல் உலக உணர்ச்சிகள் 'அவஸ்யம் கெட வேண்டும்'. முதலில் பக்தி பெருகும் போது உடலோ, உறவோ, பொருளோ கண்ணில் காணும் ஜகமோ "**பொய் பொய்**" என வாக்கால் சொல்லிவிடுகிறீர்களே தவிர கஷ்ட நஷ்டம் வரும்போதும், ஓர் ஜீவனை இழக்கும் போதும், பணசிரமமோ உடல்சிரமமோ "**உன் வினைப்படி**" உன்னைத் தாக்கும் போதும், தெய்வத்தை மறந்து விடுகிறாய். குருதேவனை மறந்து விடுகிறாய், உன்னையே (நாம் "**ஆத்மா தான்**" என்பதையும்) மறந்து விடுகிறாயே ஏன், ஏன், ஏன்?



உ

தெய்வீக உணர்வு:— தெய்வீக உணர்வென்பது உலக பொருள்களும் அனைத்து ஜீவகோடிகளும் முதலில் "இறைவன் உண்மையாக கருதும்" பின் அவை அனைத்தையும் "இறைவன் இயக்கமாக கருது". பின் அவை அனைத்தும் அவரவர் "வினையின்படி விதி நடத்துகிறது" என கருது.

இதில் முயற்சி உன்னுடையது. ஆனால் அதன் பலன் இறைவனுடையது. உன் எண்ணத்தின்படி தான் நடக்க வேணுமென்று நீ கருதினால், நீயே கர்த்தா ஆகிவிடுகிறாய். அவ்விரு புண்ணிய பாப பலன் உனக்கே சேரும். அதனால் அவஸ்யம் பிறப்பு இறப்புண்டு.

நம் வினையின் கணக்கு முடிகிறதென்றும், அந்த கணக்கின்படி தான் இறைவன் நடத்துகிறான் என்றும். வினையின் பலனை எந்த கேள்வியும் மறுப்புமின்றி அப்படியே ஏற்றுக் கொண்டால் கர்த்தா இறைவன் ஆகிறான். அந்த கர்மாவின் பலன் அவனையே சேரும். அதனால் உனக்கு பிறப்பு இறப்பு இல்லை

அங்கு வினையையும் அதன் பலனையும் இது ஏன்? எப்படி? எதற்கு? என கேள்வி எழுந்தால் நீயே அவ்வினையை வலுவில் உனக்கே வாங்கிக் கொள்கிறாய் அதனாலும் வினை தொடரும், பிறப்பிறப்பும் உண்டு.

இதை வைத்து ஓர் ஸத்ய வாசகமும் உண்டு. அதாவது அறியாமையின் ஜீவன் கேட்பதுவும், அங்கு இறைவன் பதிலும் எப்படி அமைகிறதென்றால்

ஜீவன்:— நான் கேட்பது (நினைப்பது) எல்லாம் கிடைப்பதில்லையே

**அது ஏன்? ஏன்? ஏன்???**

இறைவன்:- குழந்தாய்! உனக்கு கிடைப்பதை ஏன் நீ விரும்புவதில்லை

**அது ஏன்? ஏன்? ஏன்???**

இதன் உட்கருத்தை உணர்வாயாக, நீ கேட்பதுவும், நினைப்பதுவும் "உன் மனோ கற்பனை"!

ஆனால் உனக்கு கிடைக்கப்பட்டதோ "அப்போது உனக்கு தேவை எதுவோ" அதை மட்டும் கொடுப்பது "இறைவன் கருணை"! (ஆனால் அது உன் வினை)

உட்பொருள்:— வயிற்று நோய் உள்ள குழந்தைக்கு சர்க்கரை பதார்த்தம் வேணுமென்று கேட்டால் உண்மையின் தாய் அதை கொடுப்பாளா? மாட்டாள். அப்போது கசப்பான (மருந்தையே) உணவையே கொடுப்பாள். அது தன்மை போல் நீ கேட்பதும் நீ நினைப்பதும் அந்த நேரம் உனக்கு தகாததாக இருப்பதால் அந்த நேரம் வேறொன்றை கொடுத்து உன்னை சமாளிக்க எண்ணுகிறாள் உன் உண்மைத் தாய். அங்கு நீ அடம் பண்ணினையானால் அடி தான் (தண்டனை தான்) உண்டு. இதை அனுபவ நிலையில் உணரலாம்.



உ

மேலும் இங்கு ஒன்றை கருத்தில் கொள்ளலாம்
"தேவைகளையும் ஆசைகளையும் பெருக்கிக்கொண்டால்
அதுமமதைய கற்பனையாகும். அது வினைகளின்
பெருக்கமாகும். அதுமமதையே அவஸ்தைகளுக்கு
நாமே இடம் கொடுத்ததாகும்.
கிடைப்பதிலும், நடப்பதிலும் இது இறைவன் கிருபை
என்றும் இது "**போதும்**" என்ற நிறைவோடு இருப்பது "**அறிவின் முதிர்ச்சி**" ஆகும். அங்கு வினைப்பெருக்கமில்லை. அங்கு
எந்த அவஸ்தைகளும் இல்லை. அங்கு திருப்தி, அமைதி, சாந்தி "இறை
கிருபை பரிபூரணமாக உண்டு"!

ஓர் உதாரணம்:– கணவனோ மனைவியோ குழந்தையோ இதில் ஏதேனும் ஒன்றை இழக்க நேரிட்டால் அவர்கள் வந்த காரியம் முடிந்து விட்டது. இது இறைவன்
கருணையே என அமைதிகாத்தல் "தெய்வீக உணர்வாகும்"
வான் பொருளோ வீடுமனைகளோ உன்மனதிற்கு பிரியமான ஒன்று
உன்னைவிட்டு நீங்கிற்றென்றால் வினை கழிகிறதென்றும். இறைவன் கருணையின்
பார்வை உன்மீது படுகிறதென்றும் அமைதியும் சாந்தியும் கொள்வது "தெய்வீக
உணர்வாகும்"

தீயகாரியம் ஏதோ செய்ததாகவும் பேசியதாகவும் ஓர்பழி வந்தால் அதை அமைதி
யுடன் ஏற்றுக்கொள்வதும். அந்த நேரம் இறைசிந்தனையோ குருசிந்தனையோ
கொண்டு அமைதியுடன் விடை காண்பது "தெய்வீக உணர்வாகும்"
எந்தகாரிய காரணங்களிலும் வீண் கற்பனையை வளர்க்காமல் அதுகஷ்டநஷ்ட
மாக தோற்றினாலும் சகித்துக்கொண்டு இறை நம்பிக்கையோடு அது நலமே அது
சுகமே என அமைதிகாப்பது "தெய்வீக உணர்வாகும்"

இந்தவிதம் நிறைய எழுதிக்கொண்டே போகலாம் ஆனால் முடிவாக
உடல் உலக உறவு பந்த பாசங்களோ அவைகள் நடைபெறும் காலங்களில்
எந்தவித விருப்பும் வெறுப்பும் இல்லாமல், பேதம் இல்லாமல், குற்ற உணர்வு
இல்லாமல் அமைதிகாப்பது "தெய்வீக உணர்வாகும்"
இந்தகாலங்களில் ஒன்றை மட்டும் உணரலாம்"?

# "உணர்ச்சிவசமாவது மனமாகும்"
# "உணர்வோடு இருப்பது அறிவாகும்"!

அதாவது?

சபலம், சலனம், சந்தேகம் இவைகளோடு கூடிகொடூர குணதோஷங்
களுக்கு ஆளாகி சலிப்படைவது "மனமாகிய உணர்ச்சியாகும்"!



உ

சுயம் சுவனம் சந்தேகம் இல்லாமல் 'எந்த குண தோஷங்களும் பற்றுமல் அனைத்தும் "இறையருளே" என அடங்கிய நிலையில் அமைதியின் சொரூபமான "அறிவோடு ஒன்றுவது உணர்வாகும்"!

பரஉணர்வு:– இந்த பரவுணர்வுக்கு விளக்கம் கொடுத்தால் அது அந்த "பர சொரூபத்தையே குறிப்பிடுத்தியதாகும்". இதற்கு ஒரே விளக்கம்:–

"அகம்பிரம்மம், பிரம்மம் அகம், ஜகம்பிரம்மம், அகமே எல்லாம்!

"ஜகம், பரம், ஜீவர்கள், அணுஅளவும் இல்லை"!!

2. உணர்ச்சியின் வெளிப்பாடு:– இந்த உணர்ச்சிகள் வெளிப்படுவது "ஐந்து நிலையாகும்". அந்த ஐந்தாவது:– "காண்பது, கேட்பது, நுகர்வது, சுவைப்பது, தொடுவது" (ஸ்பரிசம்) ஆகும் இதில் அதிக முக்கியமாக உணர்ச்சிவசப்படுவது மூன்றும், அவையாவன:–

"காண்பது, கேட்பது, தொடுவது" (ஸ்பரிசம்)

ஆகிய இந்த மூன்றுமே. இதற்கு விளக்கம் அனேக இடங்களில் அனேக விதமான விளக்கம் கொடுத்திருப்பதால் இங்கு விளக்கம் தேவையில்லை.

இங்கு மேலே கூறிய இறை உணர்வைப் பெருக்கினால் "உணர்ச்சிகள் கெடும்"! மமைய கற்பனையைப் பெருக்கி அதன் மூலம் "குணதோஷங்களைப்" பெருக்கினால் "உணர்ச்சிகள் வெளிப்பாடாகும்" இதன் உண்மை என்ன வென்றால் "உணர்ச்சிகள் பொங்கி எழுச்சி ஆகும் போது, தற்கவன சக்தியுடன் இருந்து கொண்டு தெய்வீக உணர்வோடு இருந்தால்"; (அனைத்தும் இறைஅருளே என்றும், எல்லாம் நன்மைக்கே நடைபெறுகிறது என்றும், நம் கவனக்குறைவால் கஷ்ட நஷ்டமாகத் தெரிகிறது என்றும். இது மமைய கற்பனை யென்றும் இருந்தால்) "எல்லாம் நீயே" என்ற தெய்வீக உணர்வோடு இருந்தால், உணர்ச்சிகளின் வெளிப்பாடு அடங்கும் அங்கு அக உணர்வு மேலோங்கும். அங்கு பயம், துக்கம், கலக்கம் சஞ்சலம் இராது.



உ

## மெய்யுணர்வு.

ஆன்மநேயக் குழந்தைகளே!

இந்த ஓர்மைப்பாடுள்ள அதவுணர்வோடு இருக்கப்பழகிக் கொள்ளுங்கள்.

அதாவது?

பரம்பொருள் ஒன்றே ஸத்யம். அதுவே தேவ தெய்வங்களாகவும், ஜடகட படாதிகளாகவும், அனைத்து ஜீவகோடி சரீர நாம ரூபங்களாகவும், ஜகப் பொருள்களாகவும், தன்னைத் தானே ஆக்கிக் கொண்டு, தன் மாயையைத் தன் வசம் வைத்துக் கொண்டு, தன் மாயையில் தோன்றிய மனதை வைத்து ஜீவர்களைப் பற்ற வைத்துக் கொண்டு, அளப்பரிய விளையாட்டை விளையாடிக் கொண்டிருக்கிறது.

இந்த ஜீவனானவன் "இறைவன் கிருபையினால் கிடைத்த"

# "தனது மன முயற்சியில்"

1. அனைத்தும் இறைவனுடைமையே என்றும்; பின்,
2. அனைத்தும் இறை சொரூபமே என்றும்; பின்,
3. மனம் நம்மைப் பற்றியதால் நாம் ஜீவன் ஆனோம் என்றும்; பின்,
4. இறை உணர்வால் மனதின் புற உணர்ச்சிகளை கெடுத்து விட்டால் நாமே இறைவன் என்றும்; பின்,
5. இறைவன் மாயையை விட்ட நிலையில் அவன் பரமே என்றும்; பின்,
6. ஜீவன் மனதை விட்ட நிலையில் இறைவனாகிய பரமேயானோம் என்றும்; பின்,
7. முடிவில் "அஞ்ஞானமனதை விலக்கிய ஜீவனாகிய **ஆத்மாவும்**";
முடிவில் "மாயையை விட்ட இறைவனாகிய **பரமாத்மாவும்**;"
முடிவில் சுத்த சைதன்ய ஸ்வயம்பிரகாசமான **பரமும்**;

8 இந்த மூன்றும் ஒன்றான தன்மையினால் "பராபரம் என்னும் பரப்பிரம்மம்" "அது நாமே, நாமே அது" என்று உங்கள் ஸ்வய ஞானனுபவத்தினால் தெளிக.



உ

## சாதனை!!!

1. ஜகநாமரூபத்தை மறந்து "மண்" ஆக உணருங்கள்.
2. கோரகுணங்கள் உங்கள் மனதின் கற்பனையென்று உணருங்கள்.
3. உறவின் பெருக்கமெல்லாம் வினையின் தொடர்பு என உணருங்கள்.
4. கஷ்டநஷ்டத்தினால் உங்கள் வினை கழிகிறது என உணருங்கள்.
5. பாவனையை விட்டு விட்டால் அனைத்தும் மண்ணாகவும் பதுமையாகவும் தான் தோன்றும்.
6. ஜடப்பொருள் எந்த நாமரூபத்தையும் தாங்கி வரவும் இல்லை, நிற்கவும் இல்லை.
7. ஜகம் ஆடவில்லை, அசையவில்லை. உங்கள் மனமே அதை அசைக்கிறது.
8. ஜலமும் மண்ணும் முறையே புண்ணிய பாப வினைகளாகும்.
9. ரஜோ தமோ குணங்களை விட்டு ஸத்வ குணத்தில் நில்லுங்கள்.
10. பின் ஸத்வ குணத்தையும் விட்டு அனைத்தும் நாமென்ற "ஏக" குணத்தில் நில்லுங்கள்.
11. எல்லாம் இறைவன் செயலென்றால் அங்கு புண்ணிய பாபம் இல்லை.
12. உன் எண்ணமே உன் இல்லாத வாழ்வை நடத்திவைக்கிறது.
13. எந்த ஜடப்பொருளும் எந்த நாமரூபங்களையும் கேட்கவும், ஏற்கவும் இல்லை.
14. நீயே உன் சுயதேவைக்காக அவைகளுக்கு நாமரூபங்களை கொடுத்தாய்.
15. அந்த நாமரூபங்களை கெடுத்து அனைத்தும் "**மண்ணே**" என நீ உணர்ந்துவிட்டால் அங்கு குண தோஷங்கள் அழிந்துவிடும். அந்த மண்ணே "**தாஸி**" ஆகிவிடும். அந்த தாஸியே "**ஜீவ அணுக்கள்.**" அந்த ஜீவ அணுக்களே உனது "**ஆத்மா**" ஆகும். அந்த ஆத்மாவே ஊசி நாட்ட இடமில்லாமல் எங்கும் நிறைந்திருக்கும் "**பரமாத்மா**" ஆகும். அந்த பரமாத்மாவே கோடானு கோடி அண்டங்களிலும், அண்ட ரண்ட பிரம்மாண்டங்களிலும் வியாபித்தும், அனைத்திற்கும் ஆதாரமாயும், ஆதரவாயும், விவக்க வொண்ணா, விளக்க ஒண்ணா ஸ்வயம் கோடி சூர்யப்பிரகாசமான



உ

# "பராபரம்" என்றும், "பரப்பிரம்மம்" என்றும் ஸ்ரீமஹான்களால் "உணரக் கூடிய" "பரசொரூபமாகும்".

எம் செல்வங்களே! ஓர் அனுபவம்.

ஓர் கஷ்டநஷ்டம், துன்ப துயரம், சஞ்சலம் சங்கடம், ஆகியவைகள் ஓர் திருநாமரூபமுள்ளதாவத்தை பற்றியே வரும். உண்மையில் அந்த ஜடசொரூபத்திற்கு உண்டா என கூர்ந்து நோக்கினால் அவை இல்லையென்றாகிவிடும். பின் அவை தோற்றுகிறதே அவை எவைக்கு? என கூர்ந்து நோக்கினால் அவை "மனதிற்கு" என தெளிவாகும்.

1. ஓர் ஜடசொரூபம் உடைந்தால் அங்கு மனமும் இல்லை. ஆனால் உன்னிடம் மனம் உண்டு. இங்கு அப்பொருள் மேலுள்ள "அபிமானத்தால்" என்னுடையது என்ற மேலே கூறிய குணதோஷங்கள் தோன்றுகிறது என உணர்க. அந்த அபிமானத்தை அகற்றிவிட்டால் அந்த குணதோஷங்களும் அகன்றுவிடும்.

உ. ஓர் ஜீவனுள்ள ஜடசொரூபம் வியாதியென்றதாவஸ்தைகளினாலோ அடிபட்டு மரணாவஸ்தையினாலோ ஓர் கலம் வேதனையை அனுபவிப்பதைப் போல் தோற்றினால், "அந்த அவஸ்தை எவருக்கு என சற்று உணர்வாயாக". இங்கு கூர்ந்து நோக்கினால் "அவஸ்தைக்கு உட்பட்ட ஜீவன்" "எனக்கு" வேதனை வந்து விட்டதே என "மனோஅபிமானத்தால்" துடிக்கும். "பார்க்கும் பந்தப்பட்ட ஜீவன்" "உனக்கும்" வேதனை வந்து விட்டதே? என "மனோஅபிமானத்தால்" தவிக்கும்.

இவ்விரண்டுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இது வந்த வழி வேறு, அது வந்த வழி வேறு. இது போகும் நிலை வேறு, அது போகும் நிலை வேறு. இவ்விரண்டிற்கும் "வினை சம்பந்தம் இருக்கிறதா" என நோக்கினால், ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை. "மனோசம்பந்தமே" இங்கு பளிச்சென தெரிகிறது. இந்த மனோ சம்பந்தம் எப்படி வந்ததென்று நோக்கினால் வந்து இருந்துவிட்டு முடிந்தாலும் மறையும் தாவந்தின் மேல் வைத்த "என்னுடையது" என்ற "அபிமானத்தால்"



உ

வந்ததை தெள்ளத் தெளிவாக விளங்கிவிடுகிறது
ஏ அறியாமையின் ஜீவனே!

உன் தூலமே வாடகை
தூலம். அதன் ரட்சிப்பே உன்கையில் இல்லை.
பின் பிறிதொரு தூலத்தின் மேல் பிடிப்பு உனக்கேன்?
ஆனால் இந்த அபிமானத்தை விடுவது மஹா கடினம்தான். காரணம்
**"பழக்க தோஷம்"** இவைகளை தள்ள வேண்டுமென்றால்
மேலே சொன்ன நிலையில் உணர்வைப் பெருக்கி.
"அவஸ்தைப்படுபவனும் இல்லை. அவஸ்தையை காண்பவனும் இல்லை"!
இந்த மாயா மனம் என்னுடையது என்ற பாவனையால் வந்தது. ஆனால்
இது உன்னுடையதே என இறைவன் வசம் மனதைத் தள்ளி விட்டு
நாம் ஸத் சித் ஆனந்த சொரூபமே என **"சும்மா"** இருக்கப் பழகிக்
கொண்டாலன்றி இதற்கு மீட்பே இல்லை.

"ஆனால் கடினமான பயிற்சிதான்"!

பழகிக் கொண்டால் வெறும் கனவுக் காட்சிதான்!!

உலகாகவும் உடலாகவும் பார்த்துப் பார்த்து பழகிப் பழகிப்
**"பாழாகிப்"** போனாயே!
இதை!

> கற்கண்டு கடினமாக இருக்கிறதென்று துப்பிவிடமாட்டாயே. அதைப் போல் இதையும் கடிந்து சுவைத்துவிடலாம் தயைபாரு

திட்டமிட்ட ஓர் பொம்மலாட்டக் காட்சியென்றும், அனைத்தும் மண்ணுக்கு
அன்னியமில்லையென்றும் உணர்வுடன் பார்த்துப் பார்த்து பழகிப் பழகிப்
**"பால்"** என ஆகலாமே!

எம் செல்வக் குழந்தைகளே! எம் ஞானக் குழந்தைகளே! எம் விபரம் அறியா
மழலைச் செல்வங்களே! உங்களால் இப்படிப் பழக முடியும். எம் பழக்க அனுப
வம் உங்களுக்கும் வரும் என வாழ்த்துக் கூறி ஆசீர்வதிக்கிறோம்.
நீங்கள் அனைவரும் **"எம்"** குழந்தைகள்
உங்களால் முடியும். முடியாததை இந்த வைத்தியம்
புலம்பாது. அனைத்தும் ஒன்றே, அது நலமே அதுவே
யாம். அதுவே நீங்கள்.
இது ஸத்தியம், இது ஸத்தியம், இது ஸத்தியம்!!!

**பாபா.**



(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.

ஸத்தியம் பேசு. ஓம் நாவை அடக்கு. கருணையோடு இரு.

ஸத்தியம் பேசினால் தர்மம் நிலைபெறும்.

# ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம், ஓம்!

அகம்பிரம்மம், ஜெகம் பிரம்மம், அகமே எல்லாம்!

ஜெகம், பரம், ஜீவர்களும் சிறிதும் இல்லை!!

## நாம ரூபத்தின் விளக்கம்.

அன்பான குழந்தைகளே!

உங்கள் அகத்தினில் ஆன்ம சுகம் பெறுவீர்களாக. இந்த ஜெகமும், அனைத்து பொருள்களும், அனைத்து ஜீவகோடி (84 லட்சம்) சரீரங்களும் ஜடமே. அவைகள் அறிவற்ற ஜடமே; அனைத்தும் மண்மயமே; "மண்ணுக்கு" அன்னியமில்லையென்பதை உறுதியாக முடிவு பண்ணுங்கள். ஆனால் இறைவன் சூட்சுமமாக இருப்பதால் அவன் மட்டும் ஒலி சொரூபமாகவும், ஒளி சொரூபமாகவும் இருக்கிறான்.

ஒலி:— ஸப்தார்த்தம்.

ஒளி:— அக்கினி. அதனினும் சூட்சுமமான ஆன்ம ஒளி.

ஆனால் மாயையில் தோன்றிய இந்த மனம் மட்டும் "எண்ண" வடிவமாக இருக்கிறது. எண்ணம் அதாவது கற்பனை இல்லையானால் இந்த மனம் இல்லையென்றே சொல்லலாம். அந்த எண்ணமானது ஓர் உருவத்தைப்பற்றியே எழும். அதாவது அந்த உருவத்திற்கு ஓர் "நாமத்தை" கொடுத்து இயங்கவைப்பது இந்த எண்ண வடிவமான மனமேயாகும். அந்த இயக்கம் எப்படி உண்டாகிறதென்றால்,



உ

ஒவ்வொரு உருவத்திற்கும் இது இன்னது, இது இன்னது
என்ற ஓர் "**குணத்தை**" கொடுத்து அவைகளை
இயக்கமாகிய "இன்ப துன்பங்களை" கற்பனை சொரூபத்
தில் கொடுத்து இயங்க வைக்கிறது இந்த மாயாமனம்.
அக்குணங்கள் விசித்திரமாகவும், விநோதமாகவும், விகாரமாக
வும், விரோதமாகவும், வித்தியாசமாகவும், விபரீதமாகவும் எண்
ணவடிவில் அமைவதால் குணங்களின் இயக்கமே இயக்கம் அன்றி,
(அசைவின்றி) "மண் மண்ணாகவே இருக்கிறது". அந்த மண்ணில்
எந்த தோற்றமும் இல்லை, எந்த மாற்றமும் இல்லை; கூடுதல் குறைவு
இல்லை, அதனால் எந்த "**கர்மாவும்**" (புண்ணிய பாபங்களும்)
இல்லையென்றே சொல்லலாம். ஆனால் மேலே சொன்ன குணதோஷ
ங்களின் நிமித்தம் இந்த மனதின் வடிவமாக இந்த ஜடசொரூபம்
அதாவது மண் வடிவமெடுக்கிறது! நம்மை எண்ணத்தின்படி இந்த
ஜடசொரூபம் ஆடுவது போலவும், அசைந்து இன்ப துன்பங்களைக்
கொடுப்பதைப் போலவும் ஓர் "**மாயா ஜாலம்**" இந்தமனம் செய்கிறது.
அது கற்பனை வடிவில் பிறப்பு இறப்பு என்றும் பேசப்படுகிறது.
எண்ணமும் அதன் பிணைப்பான குணமும் இல்லையானால் பிறப்பும்
இறப்பும் இல்லையென்றே சொல்லலாம்.

எம் ஞானக் குழந்தைகளே!

உலகின் எந்த வஸ்துக்
களும் அறிவற்றதாக இருப்பதால் அவைகள் எங்களுக்கு இந்த
"ரூபத்தை" கொடுங்கள் என்றோ, இந்த "நாமாவை" எங்களுக்கு வையுங்
கள் என்றோ, இந்தகைய "குணங்கள்" எங்களுக்கு வேண்டுமென்றோ
**கேட்பதும்** இல்லை, அவைகளை அவைகள் "**ஏற்பதும்**"
இல்லையென்றே பிரமாணமாகச் சொல்லலாம். ஆனால் இந்த மனமே
ஓர் இன்ப துன்பத்தை (புண்ணிய பாபத்தை) வேண்டி ஓர் "உருவத்தையும்"
அதற்கு ஓர் "பெயரையும்" "அது இன்ன குணமுடையது" என்பதையும்
தம் கற்பனையினால் செய்து கொள்கிறது.



உ

ஆனால் இவைகள் "மாயா மனதின்" இயக்கத்தினால் நடைபெறுவதால் உலக வஸ்துக்களும் அதன் இயக்கங்களும் ஸத்தியமாகவும், நித்தியமாகவும், "அப்போதைக்கப்போது" தோற்றப்படுகிறது. ஆனால் விழிப்பின் நிலையிலோ, கனவின் நிலையிலோ உற்றுணர்ந்து நோக்கினால் அவை பொய்யெனத் தோன்றினாலும் அதை பொய்தான் என்று உணர்ந்தாலும் பொய் என உணர முடியாமல் மெய்யாகவே காட்சி அளிக்கிறது. அருமைச் செல்வங்களே! இதனின் விசேஷம் என்னவென்றால், "மண், மலை, மரம், செடி, கொடி வகைகள்" முதலில் இயற்கையின் நிலையில் யாம் மேலே கூறிய மண் மலை மரம் செடி கொடிகள் என்றே "**ஒரே ரூப நாமத்தோடு தான்**" தோன்றின. இவை இயற்கையின் சிருஷ்டி என்றும் இதை ஈசன் சிருஷ்டி என்றும் சொல்லலாம்.

ஆனால் மேலே கூறிய வைகளை இந்த மாயா மனமானது தான் விளையாடும் நிமித்தமாக, "**ஜீவ சுய தேவை**" நிமித்தமாக, ஓர் கற்பனையை உருவாக்கி அந்த இயற்கையை மாற்றி "செயற்கையாக்கி", முதலில் "ஓர் உருவத்தை உண்டு பண்ணி, பின் அவைகளுக்கு ஏற்றபடி ஓர் நாமாவையும் கொடுத்து, அதனை "**நாமரூப, குண, தோஷத்தையும்**" உண்டு பண்ணி இங்கு இந்த மனதிற்கு தேவைகளையும் ஆசைகளையும் மாறி மாறி பின்னிப் பிணைந்து கொண்டது. இதை ஜீவன் சிருஷ்டி என்றும் சொல்லலாம்.

"ஈசன் சிருஷ்டி":- மண், மலை, மரம், செடி, கொடி, புல், பூண்டுகளாகும். இவைகள் இயற்கை (இறைவன்) ஆகும்.

"ஜீவன் சிருஷ்டி":- உணவு, உடை, இருப்பிடம், இவைகளைத் தாங்கும் பாத்திர பண்ட பதார்த்தங்களும் ஆகும். இவைகள் செயற்கையாகும். இவை இந்த ஜீவனுடைய மாயாமன கற்பனை சொரூபங்களாகும்.



உ

எம் குழந்தைகளே! இயற்கையை இயற்கையாகவே பார்த்துப்பழகிவிட்டால் செயற்கையின் நாமரூப குணதோஷம் இந்த மாயா மனதை விட்டு விலகிவிடும். அங்கு வேறு எந்த கற்பனைகளும் வரப் பாதை இல்லாமல் போய்விடும். ஆகவே அங்கு கர்மாவும் இல்லை பிறப்பிறப்பும் இல்லையென்றாகிவிடும். ஓர் உண்மையை உணரவேண்டும்.

எம் ஞானமழலைகளே! விதிவசத்தால் வினையை அனுபவிப்பதற்காகவே ஓர் குழந்தை பிறக்கிறதென வைத்துக் கொள்ளுங்கள். ஓர் குறிப்பிட்ட காலத்தில் அதற்கு ஓர் நாமகரணம் (பெயர்) சூட்டப்படுகிறது. அந்த பெயர் அந்த "தூலத்திற்கா"? அந்த தூலத்தோடு வினைசம்பந்தம் கொண்டு இயக்கும் "மனதிற்கா"? அந்த தூலத்திற்கும் மனதிற்கும் சாட்சியாயிருக்கும் "ஆத்மாவுக்கா"? என கவனித்தால் இம் மூவருக்கும் இல்லையென்றாகிவிடும் பின் எவருக்கு என உணர்ந்தால் சங்கல்ப விகல்ப மனதிற்கு சாட்சியாயிருக்கும் "**இறைவனுக்கு**" என உண்மையில் உணரமுடியும். இந்த இறைவனை "மனச்சாட்சி" எனவும் சொல்லலாம். இந்த இறைவனை "அறிவு" எனவும் சொல்லலாம். இந்த இறைவனை "இதயவாசி" யென்றும் "அந்தர்யாமி" எனவும் சொல்லலாம். ஆகவே எமதய்யனின் "விஷ்ணுசகஸ்ர நாமத்தில்" எமக்கு கோடானுகோடி நாமங்கள் உண்டு எனச் சொல்கிறேன்.

எம தன்னையின் "லலிதாசகஸ்ர நாமத்திலும்" எமக்கு கோடானுகோடி நாமங்கள் உண்டு எனச் சொல்கிறாள்.

ஆகவேதான் பிரமாணமாகச் சொல்கிறேம். அது இயற்கையோ அல்லது செயற்கையோ இந்த கோடானுகோடி அண்டரண்டபிண்ட பிரம்மாண்ட மானாலும் சரி. அனந்த ஜீவகோடிகளானாலும் சரி. அனந்த உலகவஸ்துக்களானாலும் சரி. அனைத்து "**நாமங்களும்**" (அனைத்துப் பெயர்களும்) இறைவனுடையதேயன்றி அவைதூலங்களுக்கும் அல்ல. உள்ளங்களுக்கும் அல்ல. ஆன்மாவுக்கும் அல்ல என பிரமாணமாக சொல்கிறேம்.



உ

1. "நாமம்" என்றால் ஒலியே தவிர அதாவது சப்தார்த்தமே தவிர உருவம் என்ற தோற்றமில்லை என்பதே உண்மை.
2. "ரூபம்" என்றால் ஜடசொரூபம் அதாவது அவித்தையாகிய மூடசொரூபம், அது சப்தம் இல்லாதது என்பதே உண்மை.

"இது வினையின் ரூபம்" ஆனால்?

3. "வினை" (புண்ணியபாபம்) என்றால் அது ரூபமே தவிர சப்தம் இல்லை. ஆனால் இந்த புண்ணியபாபத்தை (வினையை) இயக்குவதற்கு சப்தம் தேவைப்படுகிறது. இந்த சப்தம் இல்லையால் அதாவது சப்தமாகிய "விவகாரம்" இல்லையானால் வினையின் இயக்கம் இயங்க முடியாது. ஆகவேதான் இந்த ஜகத்தை "**நாமரூபம்**" உடையதாக இறைவன் படைத்தான்.

1. ஆனால் இயற்கையின் (இறைவனின்) நிலையில் "ஓர் தோற்றத்தை (ரூபத்தை) உண்டு பண்ணி அந்த ரூபத்திற்கு ஓர் நாமாவை வைத்தான் இறைவன்." ஆகவே அவை "**ரூபநாமம்**" மாகவே திகழ்ந்தது.
2. ஆனால் இந்த மனம் படைத்த ஜீவன் அந்த இயற்கையை தம் மனவலிமையால் செயற்கை ஆக்கி "ஓர் நாமாவை கற்பனை பண்ணி இந்த நாமாவுக்கு தகுந்தபடி ஓர் வடிவுடைய ரூபத்தை உண்டு பண்ணினான்" ஆகவே அவை "**நாமரூபமாக**" திகழ்கின்றது.

இதில் ஓர் உண்மை என்னவென்றால்?

முதலில் கூறியபடி அனைத்து ரூபங்களையும் (இறை) நாமாவில் ஒடுக்கி ஒன்றுபடுத்திவிட்டால் அங்கு "**வினை**" வரப்பாதை இல்லை.

இரண்டாவது கூறியபடி அனைத்து நாமங்களையும் இறைவனுக்கு அர்ப்பணம் செய்யாதபடி ரூபங்களுக்குத்தான் இந்த நாமா எனக் கருதினால் "**வினை**" யை நாமே அந்த ரூபங்களில் செலுத்தி மேலும் மேலும் பிறப்பிறப்பை நோக்கிறோம். எண்ணமே மனம். மனதின் கற்பனையே எண்ணம். அந்த கற்பனையாகிய எண்ணத்தின் வடிவமே புண்ணியபாப சம்பந்த வினைக்கூடாகும். அந்த வினைக்கூட்டை (தூலத்தை) இயக்குவது சூட்சுமமாகிய எண்ணங்களேயாகும். இறைவனும் சூட்சுமம், எண்ணங்களும் சூட்சுமம். ஆனால் இவைகளின் வினை இயக்கம் தூலசம்பந்த புண்ணியபாப வினைக்கூடாகும்.



உ

இதிலிருந்து என்ன உணர்கிறோம் என்றால்? தூல சம்பந்த உடல் உலக புண்ணிய பாப கர்மா தர்மங்களை, சூட்சும சம்பந்த இறைவன் சூட்சுமமான எண்ணங்களின் வழியாக நடத்தி வைக்கிறான். ஆகவேதான் உங்கள் வாக்கே, அதாவது சப்தார்த்தமே, அதாவது ஒலி அலைகளே, அதாவது சூட்சுமமான இறைவனே சப்தத்தை (வாக்கை) தொகுத்து இப்பிரபஞ்சத்தை அதனதன் புண்ணிய பாபத்திற்கேற்ப ஒழுங்காக நடத்திக் கொண்டிருக்கிறான்.

இதன் ரகஸ்யம் என்னவென்றால்? ஆசை வசப்பட்ட இந்த மனமானது இது கலியுகமாக இருப்பதால், தேவையற்ற கற்பனைகளைப் பண்ணி, எண்ணங்களை விரிவடையச் செய்து, புண்ணிய பாபங்களை பெருக்கிக் கொண்டு தூலங்களை திரும்ப திரும்ப எடுத்துக் கொள்கிறான். இதை முடிவில் எப்படி சொல்வோம் என்றால்?

எம் ஞானச்சுடர்களே!

இன்பமும் இல்லை! துன்பமும் இல்லை! பிறப்பும் இல்லை! இறப்பும் இல்லை! ஜனன மரணமென்னும் சுழலில் சுழல்பவர்களும் இல்லை! ஒன்றென்று எப்போதும் இருக்கின்ற வஸ்துவே இருக்கிறது.

ஆகவே?

## 'போனவைகளையும்', 'வருபவைகளையும்' "பற்றி கற்பனை பண்ணாதே"!!!

1. "அவஸ்தைகள் மண்மயமான பிண்டத்திற்கில்லை"! 2. ஆசைகள் எண்ண வடிவமான மனதிற்கேயல்லாமல் மண்மயமான பிண்டத்திற்கில்லை. 3. ஆசைகளை ஒலி வடிவமாயும் ஒளி வடிவமாயும் உள்ள இறைவன் வசம் திருப்பி விட்டால் புண்ணிய பாபம் இல்லை. 4. புண்ணிய பாபம் இல்லையானால் அவைகளைத் தாங்கும் உடல் உலகம் இல்லை. 5. உடல் உலகம் இல்லையானால் **நான், என்னால், என்னுடையது,** எதைத் தாங்கி நிற்கும்? ஆகவே எம் அறிவுக்குழந்தாய்! "எல்லாம் நீயே" (எல்லாம் அவனே) என அவனைச் சுட்டிக்காட்டி விட்டால், அவன் அதைச் சுட்டிக் காட்டி விடுவான். ஆகவே அங்கு அவனும், நீயும், அதுவும் ஒன்றானால் அது **"தத்வம் அஸி"** தானே? அதுவே நீ, நீயே அது!!!

பாபா.



உ

# மாயா மனம்

எம் ஆத்மசொரூபமாயும் அறிவின் சிகரமாயும் அமைந்த எம் ஞானச் செல்வங்களே!

மனம் இல்லையானால் ஜீவன் என்ற நாமா இல்லை. இந்த ஜீவனே ஆத்மாதான் என உணர்ந்துவிட்டால் அங்கு ஜீவன் இல்லை. எண்ணமே மனதின் வடிவமாக இருந்தாலும், உடல் உலக **"பழக்க தோஷங்களில்"** இந்த மனம் சிக்கிக் கொண்டதாலும், இந்த மனதை மறந்தாக்க முடிவதில்லை. இந்த ஆத்மாவாகிய ஜீவன் மனவசப்பட்ட தன்மையினால் "தற்கவன சக்தி" இல்லாமல் "மூற்கவன சக்தியாகவே" இருக்கிறான். அதாவது பிறஜீவனையும் அவன் வினை விளையாட்டையும் ரசித்தவண்ணம் தடுமாற்றம் உடையவனாகவே இருக்கிறான். அதனால் நம் தற்கவன சக்தி மறைபொருளாகவே இருக்கிறது. இந்த மனம் படைத்த மனிதன் சகவத்திற்கும் ஆதாரம், ஆதார "ஒரு சக்தி" உண்டென்றும், அது இறைவனே என உண்மை உணர்வுடன் இருந்தால் மேலே கூறிய பழக்கதோஷம் பயனற்றதாகிவிடும்.

இந்த மாயா மனமானது ஓர் நாமரூபத்தைப் பற்றியே அசைந்து ஆடும் இயல்புடையதாக இருக்கிறது. அந்த நாமரூபங்கள் அனைத்தும் **"மன்னுக்கு"** அன்னியமில்லையென்ற திட உணர்வும், அவை அனைத்தும் அவரவர் "வினை சம்பந்தத்தால்தான்" ஆடுகிறதென்ற தெய்வீக உணர்வைப் பெற்றாலன்றி இந்த மனதை மறந்தாக்க முடியாது. நாமரூபங்களின் மயக்கத்தையும், பழக்க தோஷங்களின் பயமாகிய குணத்தையும் விட்டாலன்றி வேறு மார்க்கம் இல்லையென்றே சொல்லலாம்.

நாமங்கள் அனைத்தும் இறைவனுக்கு என்றும், தோற்றமாகிய ரூபங்கள் அனைத்தும் அந்த இறைவனின் சிருஷ்டியாகிய மன்னுக்கன்னியமில்லை என்றும், இந்த மாயா மனதிற்கு அறிவுபுகட்டியவண்ணம், நாம் இறைவனின் குழந்தையென்றும், இறைவனும் அந்த பரம்பொருளும் ஒன்றே என்றும், நாமும் அந்த இறைவனும் பரம்பொருளும் அந்த காலாதீத **"ஒன்றேஎன்றும்"** நம் மாயா மனதிற்கு இடைவிடாமல் புகட்டி வந்தால் நாமரூப மயக்கமும் தெளியும். மாயாமனதின் பழக்க தோஷமும் மறையும். நாம் அதுவாகவே இருப்போம் இது ஸத்தியம்!

பாபா



உ

## விவகாரம் வந்த விதம்.

இந்த விவகாரத்தை ஓர் பட்டியலில் போட்டு
தருகிறோம், சற்று உற்றுணர்ந்து நோக்கி
ஸத்தியத்தை உணர்ந்து, அஸத்தியத்தை விடுக!

| | | | | |
|---|---|---|---|---|
| 1. மண் | ஒரே நாமம்! | ஒரே உருவம்! | குணமும் இல்லை! | உபயோகமும் இல்லை |
| 2. மலை! | ,, | ,, | ,, | ,, |
| 3. மரம்! | ,, | ,, | ,, | ,, |
| 4. செடி! | ,, | ,, | ,, | ,, |
| 5. கொடி! | ,, | ,, | ,, | ,, |
| 6. புல் பூண்டு! | ,, | ,, | ,, | ,, |

| | | | |
|---|---|---|---|
| 1. மண் ஒருமை! | மண்வகைகள் பன்மை = | ஆத்மா! | பரமாத்மா! |
| 2. மலை ஒருமை! | மலைகள் பன்மை = | ,, | ,, |
| 3. மரம் ஒருமை! | மரங்கள் பன்மை = | ,, | ,, |
| 4. செடி ஒருமை! | செடிகள் பன்மை = | ,, | ,, |
| 5. கொடி ஒருமை! | கொடிகள் பன்மை = | ,, | ,, |
| 6. புல்பூண்டு ஒருமை! | புல்பூண்டு வகைகள் பன்மை = | ,, | ,, |

இங்கு குணமும் உபயோகமும் இல்லை!

1. மண்ணின் பிரிவு = களிமண், செம்மண், உவர்மண், குருமண், பருமண். இங்கு நாமம் பல, உருவம் பல, குணமும் உண்டு, உபயோகமும் உண்டு, இங்கு நாமரூபம் வேறுபட்டு, குண தோஷம் பின்னப்பட்டு, உபயோகம் என்ற நிலையில் "வியாபாரம்" (கொடுக்கல் வாங்கல், போக்குவரவு) நடைபெறுவதால் இது "ஜனனமரணம்" என்று பேசப்படுகிறது. ஆனால் உண்மையில் இல்லை!

இதைப் போலவே மலையிலும், மரத்திலும், செடி கொடிகளிலும் புல்பூண்டுகளிலும் "ரகங்கள்" இந்த மனமாயையால் பிரிக்கப்பட்டு வீடு, ஜன்னல் கதவு, மற்றும் உண்பன, உடுப்பன, உபயோகிப்பன ஆகியவைகள் பற்பல நாமரூபங்களாக பிரிப்பதோடல்லாமல் அவற்றின் உபயோகமும், அவற்றின் அத்யாவஸ்ய தேவையும், அதனால் குண தோஷம் பின்னப்பட்டு உபயோகம் என்ற நிலையில் வியாபாரம் நடைபெறுவதால் இது ஜனனமரணம் என்று பேசப்படுகிறது. ஆனால் உண்மையில் இல்லை. இதைப் போலவே சுக்கிலம் (மண்) சுரோணிதம் (ஜலம்) இவைகளால் பிணைந்த இந்த உடலானது விவகார நிமித்தமாக ஆண் பெண் என்றும் குணதோஷம் பின்னப்பட்டு உபயோகம் என்ற நிலையில் ஓர் வியாபாரம் நடைபெறுகிறது. ஆகவே இதுவும் ஜனனமரணம் என்று பேசப்படுகிறது. ஆனால் உண்மையில் இல்லை.



2

இதைப்போலவே 84 லட்சம் ஜீவராசிகளின்
சரீரங்களும் "**மண்ணுக்கு**" அன்னியமில்லை.
இவைகள் பற்பல நாம ரூபங்களால் பிரிக்கப்படுவதால்,
அவைகளின் குணதோஷங்களும் கற்பிதமாகவே
இந்த மாயாமனதினால் திணிக்கப்படுவதால், இவை
அனைத்தும் கொடுக்கல் வாங்கல் என்றும், போக்கு வரவு என்றும்,
"**வியாபாரம்**" செய்யப்படுவதால், இதை ஜனனமரணம்
என்று பேசப்படுகிறதே தவிர உண்மையில் இல்லவே இல்லை!

இந்த மண்ணின் பிணைப்பையும் இதன் குணதோஷங்களால்
வந்த வியாபாரத்தையும் (கொடுக்கல் வாங்கலையும், போக்கு வரவையும்)
விடவேண்டுமானால்?

(ஒலி) "**நாமம்**" இறைவன் என்று உறுதிகொள்.

(மண்) "**ரூபம்**" ஜகம், உடல், பொருள்கள் என உறுதிகொள்.

1. நாமம் அனைத்தும் அதாவது ஒலிகள் அனைத்தும் இறைசொரூபமாகவே
உறுதிசெய்வதோடல்லாமல் சர்வார்ப்பணமாக "**எல்லாம் நீயே**"
என மனதளவில் உறுதி நிச்சயம் செய்யப்பட்டால் அதன் "குணதோஷம்"
இந்த ஜீவனை பற்றுதொழியும்.

2. ரூபம் அனைத்தும் மண்ணே என உறுதிசெய்வதோடல்லாமல், இந்த
மண்ணை ஜீவ அணுக்களின் கூட்டமே என்றும், அச் ஜீவஅணுக்களே
ஆத்மாவென்றும், அது நாமே என்றும் உறுதி நிச்சயம் செய்யப்பட்
டால் புண்ணிய பாபமாகிய பிறவி தோஷம் ஒழியும்.

இந்த நாம ரூபத்தின் முடிவான விளக்கம் என்னவென்றால்?

1. **நாமம்**:- இது ஒலி, இது சப்தார்த்தம். இந்த சப்தார்த்த
மானது உடல் உலக பொருள்களுக்கு என்று உணராமல்,
அனைத்து ஓசைகளும் "**இறைவன்**" நாமமென்
றும், இறைவனுக்குரியதென்றும், அவைகளில் எந்த
குணதோஷங்களும் அதனால் வந்த விவகாரம், விகாரம்
இல்லவே இல்லையென உறுதியாக முடிவு பண்ணினால்
"புண்ணிய பாப" கர்மங்கள் இல்லாதொழியும்.



உ

2. ரூபம்:- அனைத்து அண்ட ரண்ட பிண்ட பிரம்மாண்டங்களும், மனித உடல் முதல் 84 லட்சம் ஜீவகோடிகளின் சரீரங்களும், கண்ணில் காணும் அனைத்துப் பொருள்களும் "மண்ணுக்கு" அன்னியமில்லை என்றும், அவை அனைத்தும் ஜீவ அணுக்களின் தொகுப்பு என்றும், அவை அனைத்தும் நம்யதார்த்த சொரூபமான "ஆத்மா" என்றும், அதாவது தனித்துப் பார்த்தால் ஆத்மா என்றும், அனைத்தையும் ஒன்றுபடுத்தி உணர்ந்தால் அதுவே "பரமாத்மா" என்றும் "அனைத்தும் ஒன்றே" என்ற நிலையில் "பரவஸ்து" வாகிய "பரம்பொருள்" என்றும் அறிவு பூர்வமாக உணர்ந்து விட்டால் "அதுவே நாம், நாமே அது" என்ற பூரணமான பிரம்மானந்த நிலையில் திகழ்வோம் என பிரமாணமாக உரைக்கிறோம்.

3. எம் ஞானமழலைகளே! மேலும் கவனிக்கவும்:- எந்த "நாம" "ரூபங்களிலும்" கட்டுப்படாத இந்த "நான்! என்றும்! என்னுடையது" என்பது மட்டும் இந்த "மாயா மனோ வடிவமாக இயங்குவதால்" இதுவே சொந்த பந்தபாச உறவுகளுக்கு அடிப்படையாகவும், தர்மாதர்மங்களுக்கு அடிப்படையாகவும் ஜனனமரணங்களின் அடிப்படையாகவும், உடல் உலக தோற்றங்களுக்கு காரண கர்த்தாவாகவும் அமைவதால் இந்த ஒலிஅலைகளாகிய "மூன்றையும் அழித்து", மேலே கூறிய நாம ரூபங்களை மேலே சொன்ன சாதனையில் கொண்டுவரவும். இது உங்களால் முடியும். முடியாததை இந்த வைத்தியம் புலம்பாது! காரணம்,
நீங்கள் எம் செல்வ குழந்தைகள்,
அதுவே நீங்கள், நீங்களோ அது! இது ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்.

பாபா.



உ

" Sri Ram Jai Ram Jai Jai Ram Om "

ஸத்யம் பேசு. (ஸத்யவாக்கை) தர்மம் செய்.

நாவை அடக்கு. ஓம் கருணையோடு இரு.

ஸத்யம் பேசினால் தர்மம் நிலைபெறும்.

# நம்பினோர் கெடுவதில்லை!!!

அன்பின் சொரூபமாயும், கருணையின் வடிவாயும், பொறுமையின் சிகரமாயும், உண்மையில் உயர்வாயும், ஆனந்தத்தின் தெளிவாயும், ஸத்யத்தை உணர்ந்தவனாயும், சாந்தியின் அம்சமாயும், ஞானத்தில் ஓர் குழந்தையாயும்

**அமைந்த எம் செல்வமே! மணி!**

உன் அடக்கத்தினாலும், ஸ்ரீ ஸத்குரு பக்தியினாலும், தெய்வ கிருபையினாலும், ஸாதுக்கள் சங்கத்தினாலும், பரிபூரண சரணாகதியினாலும், தன்னலம் கருதாத சேவையினாலும், தீவிர வைராக்கியத்தினாலும், எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாத பொறுமையினாலும், "**ஸ்ரீராம்**" உன் உள்மூச்சாக கலந்துவிட்ட தன்மையினாலும், குடும்பம் என ஒன்று உன் விதிவசத்தால் இருந்தாலும் அதை உண்மையாகவே மறந்த ஆனந்தமாய் அமைந்த "சர்வ சங்க பரித்தியாகத்தினாலும்", உன் உள்ளக்கதவினால் உன் வினைகளை களைந்துகொண்ட தன்மையினாலும், உன் மனம் ஸ்படிகமாக மாறி அதில் "யாம் அமரும்" கோயிலாக்கிய தன்மையினாலும், "**மனோநலமும்**", "**ஆத்ம சுகமும்**" பெற்று ப்ரம்மானந்த சகஜ நிலை பெறுக என வாழ்த்தி ஆசி கூறுகிறேன்!!!



உ

" Sri Ram Jai Ram Jai Jai Ram Om"

அன்பான!
மணி! எதையுமே உன் வாய் திறந்து
விளக்கம் நீ கேட்டதில்லை; ஆனால் மௌனமாகவே
அனைத்தையும் கேட்டு உணர்வுபூர்வமாக உணர்வாய்.
ஆனால்?
இன்று நீயே "நம் மெய்யன்பர்களுக்காக" ஓர்
கேள்வி கேட்கிறாய் என்றால், இக்கேள்வியை நீ கேட்கவில்லை.
"உன்னுள் இருந்து பரகருணையாக" அதுதான் கேட்கிறது!
"கேள்வியும் அதுவே!" "சொல்வதும் அதுவே!" கிரஹிப்பதும் அதுவே!
அதன் கேள்வி என்னவென்றால்?

**"அகம் பிரம்மம், ஜகம் பிரம்மம்",**

**"அகமே எல்லாம்"!**

**"ஜகம், பரம், ஜீவர்களும் சிறிதும் இல்லை"!**

இதன் முழுமையான விளக்கம் என்ன???
இதுதானே உன் கேள்வி?
அடக்கமே உருவான குழந்தாய்! "**மணி**"!

இது வேதாந்தத்தின் மூலமந்திரமாகும். இந்த மூலமந்திரத்தில் தோன்றியதே "நான்கு மஹா வாக்கியங்கள்". இந்த நான்கு மஹா வாக்கியங்களில் தோன்றியதே "நான்கு வேதங்கள்". இந்த நான்கு வேதங்களில் தோன்றியதே "ஆகம விதிகளும் உலக சாஸ்திரங்களும்". சாஸ்திரங்களுக்குக் கட்டுப்பட்டதே "உலகம்". உலகத்தின் பிணைப்பில் கட்டுப்பட்டவர்களே இந்த "ஜீவர்கள்". இந்த ஜீவர்களை ஆட்டி வைப்பதே "மாயாமனமாகும்". முடிவில் இந்த மனதின் சொரூபம் "கற்பனையால்



உ

" Sri Ram Jai Ram Jai Jai Ram Om"

பண்ணப்பட்டதே "நாமரூப குணவிசயங்கள்", இப்படி வரிசை கிரமமாக பின்னி பிணைந்து அமைந்திருக்கிறது. இப்படி பின்னிப் பிணைந்த ஜகத் ஜீவ ஈஸ்வர சிருஷ்டிகளை வெறுமனே வாக்கால்,

அகம் பிரம்மம், பிரம்மம் அகம் என்றும், அகம் பிரம்மம், ஜகம் பிரம்மம் என்றும். அகமே எல்லாம் என்றும், ஜகம் பரம் ஜீவர்களும் இல்லவே இல்லை என்றும், கல்பகோடி காலம் சொல்லிக் கொண்டிருந்தாலும், ஒருவர் மற்றவர்க்கு போதித்துக் கொண்டிருந்தாலும்?

"ஜகம் ஜகம் தான்"! "ஜீவன் ஜீவன் தான்"!! "ஈசன் ஈசன் தான்"!!!

மேலே கூறிய இந்த மூன்றும் முழுமையாக அழிய வேண்டுமானால் இவை அனைத்திற்கும் மூலகாரணமாகிய "நாவை" அடக்குங்கள்.

நாவை அடக்குங்கள் என்றால் பேசாமல் மௌனமாக இருக்க சொல்லவில்லை.

(அதற்கு விளக்கம் நிறைய கொடுத்திருக்கிறேன்)

காட்சிகளையும், கேட்கும் ஓசைகளையும் அப்படியே உண்மை என நம்ப வேண்டாம்.

(இதற்கும் விளக்கம் நிறைய கொடுத்திருக்கிறேன்)

"கண்கள், காதுகள், பேசுவது" இவைகளில் "வீண் கற்பனை" பண்ணுவதை குறைத்து, குறைத்து, குறைத்து, எந்த விநாடி இல்லாமல் பண்ணுகிறீர்களோ, அந்த விநாடி "ஜகம், ஜீவன், ஈசன்" இந்த மூன்றும் அவஸ்யம் இல்லாது அழியும் என சொல்வதை விட இந்த மூன்றும், "உங்களுள் அடங்கும்" இது பிரமாண உண்மை!

இந்த மூன்றும் உங்களுள் அடங்க வேண்டுமானால் "ரஜோ தமோ" கோர குணங்கள் உங்கள் உள்ளத்தை கொள்ளா வண்ணம் ஜாக்கிரதையாக இருங்கள்.

(கோர குணங்களுக்கும் விளக்கம் நிறையக் கொடுத்திருக்கிறேன்)



" Sri Ram Jai Ram Jai Jai Ram Om "

எம் செல்வகுமரா!

மணி! இப்படியான கோரகுணங்கள் அழியும் சாதனம் "பொறுமை" ஒன்றுதான் (இதற்கும் விளக்கம் நிறைய கொடுத்திருக்கிறோம்)

இப்படி உங்கள் சாதனை முற்றுப் பெறுவது?

"இறை நாமா, குருவாக்கியம்"!!!

ஆகவே இவ்விரண்டையும் தைலதாரை போல் நிரந்தர யாசனம் கூட்டி அப்யாசம் பண்ணி வந்தீர்களானால் அவஸ்யம் வெற்றி பெறுவீர்!

இது எப்படி முடியுமென்றால்?

எம் அருமை!

1. மணி! கோரகுணங்கள் படிப்படியாக குறைந்து குறைந்து குறைந்து வரும்போது "நாமரூபம்" மறையும். மறையும் என்றால் அப்பொருள் மறைந்து விடாது. அதன் மயக்கங்கள் நீங்கி, பயம் நீங்கி, சந்தேகம் நீங்கி, ஆசை கோபம் நீங்கி, அதன் பிடிப்புகள் விலகி, அந்தந்த "மனமே" அந்த மனதுக்கு தனியாக இல்லையென்று திட உணர்வில் நாமரூபம் மறையும். ஆம், அந்த மனமே இதில் வந்த மாயாஜாலமான நாமரூபங்களோ இது இறைவன் மாயையால் தோன்றியதே தவிர இவை உண்மையில் இல்லையென்று திட உணர்வில் தெளிந்து, காலாதீத அந்த ஒன்றின் பிரதிபிம்பம் அந்த இறைவன் என இருந்தாலும் இறைவன் "சொரூபமானது" "மாயா வடிவமே" அந்த மாயவடிவம் மனதின் ஜகத்தை உண்டு பண்ணியது. அந்த மாயையிலிருந்து தோன்றிய "மனம்" நம்மைப் பற்றிக் கொண்ட தன்மையினால் இந்த மனதின் கற்பனையை வைத்துக் கொண்டு நாம் ஜகத்தை உண்மையென இந்த நாள் வரையும் நம்பி இருந்தோம். இந்த மனதினது ஜடசொரூபம் (அறிவில்லாதது) அதுவும் "உண்மையல்ல". இறைவன் அந்த ஒன்றின் அம்சமாக இருந்தாலும் அவன் வடிவம் "மாயாசொரூபமே ஆகவே இதுவும் "உண்மையல்ல" என உன் மெய்யறிவினால் உணர்ந்தால் அந்த க்ஷணமே.



" Sri Ram Jai Ram Jai Jai Ram Om "

ஜகத்தும் பொய், இறைவனும் பொய், என்பது உறுதியாகிவிடும்.

3. பரத்திலிருந்து பரசொரூபமாகவே வந்த இறைவன் சிலந்திப் பூச்சியைப்போல நம் மாயாகாரியத்திலிருந்து "விளையாட்டார்த்தமாக" இந்த ஜகத்தை உண்டுபண்ணினான் என "முதலில் தெரிந்து", அந்த இறைவனே ஆத்ம சொரூபமாக இருந்துகொண்டு இந்த ஜகத்தில் "விளையாடுகிறான்" என "இரண்டாவதாகத் தெரிந்து", (இருக்க வேண்டும்).

ஆனால்?

இறைவனின் மாயையினால் வந்த "**மனமானது**" இறைவனால் உண்டாக்கப்பட்ட ஜகத்தை இறைவனுடையதாக பாவனைபண்ணாமல், இந்த ஜகமும் அதன் விளையாட்டும், "**நான்**" உண்டுபண்ணினேன் என்றும், "**என்னால்**" தான் இது நடைபெறுகிறதென்றும், இவை அனைத்தும் "**என்னுடையது**" என்று உரிமைகொண்டாடி, "சும்மா சுகமாக இருக்கும் ஆன்மாவின் மேல் பழியை போட்டு" கர்த்தா இல்லாத ஆன்மாவை கர்த்தாவாக்கி, நீ ஆன்மா இல்லை, நீ இந்த ஜகத்தை அனுபவிக்க வந்த "**ஓர் ஜீவன்**" என்றவாறான ஓர் "ஜீவத்தன்மையை" உண்டுபண்ணிவிட்டது இந்த "**மனம்**"

இதை!

"நாம் ஜீவனல்ல, இந்த ஜகத்தும் எம்முடையதும் அல்ல என்றும், நாம் ஆத்மா என்றும், ஜகநாமரூபம் எம்முடையதல்ல ஆனால் ஜகம் எம்முடைய சைதன்ய சொரூபமே என தீர்க்கமாக உணர்ந்து, ஜக நாமரூபத்தையும் நாமரூபத்திலிருந்து பின்னிப்பிணைந்த "குணதோஷங்களை"யும் நிர்ரூபமாக எந்த விசாரணையுமின்றி விட்டுவிட்டால், "ஜீவ போர்வை" நீங்கும், அதனால் ஆத்ம ஸ்வரூபம் பிரகாசிக்கும். இதனால் இறைவனாகிய பரம் நாம் என்பது உறுதியாகிவிடும்.



" Sri Ram Jai Ram Jai Jai Ram Om "

தத் த்வம் அஸி!

௧. இதனால் பரம் எப்போதும் பரமே அது "அஸி"! (அஸிபதம்)

௨ இதனால் நாமரூப குணம் அற்ற தன்மையினால் ஜகநாமரூபம் இல்லை. ஆனால் ஜகம் உண்டு. அது பரசொரூப அம்சமே. ஆனால் ஜகம் உண்டு என்றால் அதுபரமே. ஜகநாமரூபம் இல்லையென்றால் "இல்லவே இல்லை"

௩ இதனால் இறைவனின் மாயையும் இல்லை அவன் மாயா விளையாட்டும் இல்லை. இறைவன் நாமரூபமும் இல்லை) அதுபரமே "அஸி"! (தற்பதம்)

௪ இதனால் இறைவன் அம்சமாகிய ஆத்மாதான் உண்டு. மனம் மறந்ததனால் ஜீவ குணபேதம் இல்லை; ஜீவ குணபேதம் இல்லாத தன்மையினால் ஆத்மாவும் பரமே "அஸி"! (த்வம்பதம்)

ஆகவே எம் கண்மணியான!

மணி! இந்த மூன்றும் இணைந்தது!

இல்லாத உலகம், ஏன் இல்லாத உலகம் என சொல்கிறேன் என்றால் தோற்றம், இருப்பு, மாற்றம், மறைவு, இந்நான்கும் ஜகத்தின் குணங்கள். (ஆகவே உலகம் இல்லவே இல்லை.)

மேலே கூறிய மூன்றும் இணைவதால், "தற்பத லட்சியமாகிய"

"பரமாத்மாவும்",

"த்வம்பத லட்சியமாகிய"

தற்கால ஜீவ நாமத்தை பெற்ற "ஜீவாத்மாவும்",

நித்திய ஸத்ய வஸ்துவாயும், முக்காலங்களிலும் இருப்பதாயும், காலாதீத அந்த ஒன்றுவும் உள்ள

"அஸிபத லட்சியமாகிய"

"தத், த்வம், அஸி"! "பராபரமும்" — அது நீயாகவே இருக்கிறாய்!

என உறுதிப்படுத்துகிறது.



" Sri Ram Jai Ram Jai Jai Ram Om "

அன்பும் கருணையும் கொண்டகுழந்தாய்! மணி

இந்த நிலையில் "ஜகத்தை"யும் நாமரூபங்களையும் அதன் கற்பனையான குணதோஷங்களையும் இல்லை இல்லை என நாசம் செய்தும்.

அந்த பரசொரூபமே ஈசனாக (இறைவனாக) வந்தது. அதற்கு நாம் தான் நாமரூபங்களை கொடுத்தோம். ஆகவே இறைவனின் நாமரூபத்தையும், ரூபலாவண்யங்களையும், மகிமை பிரபாவங்களையும், நம்முடைய கற்பனையே தவிர, இறைவன் பரசொரூபம் தான், என்ற உறுதியினால் "நாமரூபத்தை" தள்ளினால் பரம் (தேவாதெய்வங்கள்) ஒன்றும் இல்லை இல்லையென நாசம் செய்தும்.

அந்தபரசொரூபத்தின் ஓர் பொறியே, அதாவது சித்சொரூபமே, அதாவது ஆத்மாவே விளையாட்டின் நிமித்தம் இறங்கிவந்து அதை மாயாமனம் திரையிட்டுமூடிக் கொண்டதால் அது "ஜீவன்" ஆனது. அந்த ஜீவபோர்வையையும் விலக்கி, ஜீவனை ஆத்மாவாக்கிவிட்டால், "ஜீவனையும்" இல்லை இல்லையென நாசம் செய்தும்.

"இந்த நிலையில் இந்தமூன்றையும் ஒன்றுபடுத்தி பரஸ்வரூப நிலைக்கு கொண்டு வந்து விட்டால் நீயாரும்"

"ஜகம், பரம், ஜீவர்களும்", "சிறிதும் இல்லை"யென்பது பொருந்தும். வாயால் புலம்பினவோ, பக்கம் பக்கமாக படித்தவோ, பக்கம் பக்கமாக எழுதினவோ, ஸத்சங்கமேமாக எத்தனையோ ஞானக்கம் கொடுத்தாவோ, கல்பகோடி காலம் டேப் ரிக்கார்டு போல் ஒலித்துக் கொண்டே இருந்தாவோ, அவஸ்யம் இந்த மூன்றும் ஓயாது

நாங்கள் உண்டு, நீங்கள் தான் இல்லையென சொல்லும்.

அதன் உட்கருத்து

ஆத்மஸ்வரூபமாக நாங்கள் உண்டு! மனோசொரூபமாகிய நீங்கள்தான் இல்லை! என சொல்வார்கள் என பொருள் கொள்க.



உ

" Sri Ram Jai Ram Jai Jai Ram Om"

அப்படியானால் "மனித வடிவமான மனிதர்களாகிய"
நீங்கள் "ஆத்மா வடிவமான தெய்வங்கள் ஆகுங்கள்"!
நீங்கள் ஆத்மா வடிவான தெய்வங்கள் ஆகிவிட்டால்
ஜகம் ஜீவன் பரம் என சொல்லக் கூடிய இம்மூன்றும்
நீங்கள் "நாமரூபங்கள்" நீங்கள் தொடுத்தது சொல்லும் போது
தானே, நீங்களே அது வேண்டாம் என்றும், அது இல்லையென்றும்,
தள்ளிவிட்டு "உங்களையும் இணைத்துக் கொண்டும் பரமான ஆகிவிடுவோம்"
நாங்களும் அதைத் தான்

ஓம் அம்ச ஸ்வரூபமான ஞானக் குழந்தாய்! "மணி"
அகம் பிரம்மம்! ஜகம் பிரம்மம்! அகமே எல்லாம்! என்றும்,
எந்நிலையிலும் அறியக்கூடிய "அகம் பிரம்மம் - பிரம்மம் அகம்" என்றும்
வாக்கினால் விளம்பக் கூடிய இந்த "மந்திர ஜபங்கள்"
மேலே கூறியவைகளை முறையாக அனுபவத்தில் ஆக்கிக் கொண்டால்,
நீங்கள் எண்ணினாலும் எண்ணாவிட்டாலும், சொன்னாலும் சொல்லா
விட்டாலும், உங்களுக்கு "ஜீவ மறைப்பு" இல்லாத
தன்மையாலும், "ஜகத் மயக்கம்" இல்லாத தன்மையாலும்,
"தெய்வ பயம்" இல்லாத தன்மையாலும்,
"அதுவே நீ, நீயே அது"! "அதுவே நீங்கள்,
நீங்களே அது"! "யாமே நீ, நீயே யாம்"!
எனப் பிரமாணமாகச் சொல்கிறோம்.
இதுவே வேதாந்தங்களின் முடிவு! இதுவே கீதைகளின் முடிவு!
இதுவே ஸ்ரீமஹான்களின் முடிவு! இதுவே பிரமாண உண்மை!
இதுவே எம் "ஸ்வய ஞான அனுபவத்தின்"

முடிவு. துளசி பாபா.



உ

"Sri Ram Jai Ram Jai Jai Ram Om"

எம் ஞானமழலையான!
மணி! முதல் மந்திரமாகிய

அகம்பிரம்மம்! ஜகம்பிரம்மம்! அகமே எல்லாம்!
இதற்கு விளக்கம் தேவையில்லை. ஆனாலும் இந்த ஒரு பக்கத்தில் சற்று விளக்கம் தருகிறேன் உணர்க!
இதை மூன்றாக பிரித்தார்கள் ஸ்ரீமஹான்கள்.

1. அகம்பிரம்மம்! :— எம் செல்வமே மணி! எடுத்த எடுப்பிலேயே நம்மை ஆத்மாவாகவோ, பரமாத்மாவாகவோ, பரப்பிரம்மமாகவோ ஆக்க முடியாது. ஆக்கக் கூடாதும். அது முடியாத காரியம். நம்மை முதலில் "உலக உடல்பாவனை"யிலிருந்து பிரித்து. அதாவது வினையும் மனமும் பின்னிக்கிடக்கும் "ரஜோ தமோ" கோரகுண தோஷங்களிலிருந்து மனதை பக்குவமாக நிதானமாக பொறுமையாக அமைதியாக பிரித்தெடுத்து "ஸத்வ குணத்தில்" நிறுத்தப்படும் "சாட்சி" பாவனையைக் கைக்கொள்ள வேண்டும். இது "தெய்வ" நிலையாகும். இந்த தெய்வ நிலை பெற்ற பிறகு "தெய்வீக காட்சி பெற்றாலும் பெறவிட்டாலும்" (இது முக்கியம் அல்ல) மனமானது காட்சிகளிலும், கேட்கும் ஓசைகளிலும் "வீழ்ச்சி" ஆகாமல் எந்த நிலையிலும் சாந்தி, சமர்ப்பணை, அமைதி, மௌனத்தில் இருக்கிறதா என சுயசோதனை செய்து பார்த்தால் நம் மனதிற்கே தெரியும்.

இதன் முக்கியம் என்னவென்றால்?
பிராப்த வினைகளில் மனம் பந்தப்படாமல் இருந்தால் இந்த மனம் உடல் உலக நாமரூபத்தில் மயங்கவில்லையெனக் கொள்க.!
இங்கு நீ உடல் உலகமும் இல்லை "தெய்வமாகவே" ஆகிவிட்டாய் என முதலில் உணர்ந்து கொள். (சாட்சிபாவனை தெய்வநிலை.)

2. "ஜகம்பிரம்மம்"! :— இந்த சாட்சி நிலை பெற்றபிறகு "சர்வ சாட்சி" நிலை பெற வேண்டும். இதில் ஓர் உண்மை என்னவென்றால்?



உ

" Sri Ram Jai Ram Jai Jai Ram Om "

1. சாட்சி பாவனையென்பது "மனித" இனத்தை மட்டுமே குறிக்கும்! (அகம்பிரம்மம்)

2. சர்வ சாட்சியாகிய "அகண்ட" பாவனையென்பது 84 லட்சம் ஜீவகோடிகளையும் குறிக்கும் (ஜகம்பிரம்மம்)

3. பிரம்ம பாவனையென்பது "மனித இனம், 84 லட்சம் ஜீவகோடிகள், அண்ட ரண்ட பிரம்மாண்டங்கள், (ஜடப்பொருட்களும் அனைத்து உலகங்களும் இதில் அடங்கும்) அனைத்தையுமே நாமாகவும், நாமே அதுவாகவும் உணரும் "பரசொரூபநிலை"! (அகமேஎல்லாம்)

குழந்தாய்! மணி! மேலே கூறிய மூன்றும் முடிந்த முடிவாகும்! இனி கீழே கவனிக்கவும்.

சாட்சி பாவனையென்பது மனித இனத்தை மட்டும் குறிக்கும் என்றோம். அதேபோல் சர்வ சாட்சி பாவனையென்பது மனித இனத்தையும் சேர்த்து நடப்பன, பறப்பன, நீந்துவன, ஊர்வன ஆகிய சகல ஜீவராசிகளையும் இறைவன் சொரூபமாகவும், அதுவே நம் சொரூபமாகவும் ஓர்ந்து உணர்வதே சர்வ சாட்சி நிலை. இதை அகண்ட பாவனை என்றும் சொல்வர்.

3. "அகமேஎல்லாம்"! :— இது இங்கே மேலே மூன்றாவது சொல்லப்பட்ட பிரம்ம பாவனையாகும். இங்கு அனைத்தும் நாமானதினால் இங்கு சாட்சியோ, சர்வ சாட்சியோ இல்லாமல் மேலே மேற்றில் சொன்னபடி அனைத்தும் நாமே அதாவது அகமேஎல்லாம் என்ற நிலை பொருந்தும்.

எம் ஸத்யத்தின் குழந்தாய் மணி! ஓர் சாதனையாளன் முதலில் சாட்சி (தெய்வ) நிலை பெறுவதுதான் சாதனை. மற்றும் இரண்டும் தானே சித்திக்கும். அதற்கு எந்த பயிற்சியும் முயற்சியும் தேவையில்லை. இவைகளை முறையோடு பெற்று அதுவே நீங்களாகவும், நீங்களே அது ஆகவும், ஆசிகூறுகிறோம்!

பாபா



(ஸத்ய வாக்கை)

ஸத்யம் பேசு. **ஓம்** தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

ஸத்யம் பேசினால் தர்மம் நிலை பெறும்.

# "ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம்"

# "அகம் பிரம்மம். ஜெகம் பிரம்மம்"

## "அகமே எல்லாம்"

# "ஜெகம், பரம், ஜீவர்கள், சிறிதும் இல்லை"

# "ஓர் உண்மை"!!!

ஓம் உண்மையின் அன்பு சொரூபமே! **மணி**
மற்றும் எம் மழலைச் செல்வங்களே!
உங்கள் அகத்தினில் ஆனந்தமும், அந்த ஆனந்தத்தால் "ஸ்வயானுபவமும்" பெறுக என வாழ்த்தி ஆசி கூறுகிறேன்.

"இதில் கண்டவைகளை சிரத்தையுடன் உணரவும்"!

1. "தெரிவது":- இது கண்களால் காண்பதும், காதுகளால் கேட்பதும், தொட்டு உணர்வதும், சுட்டிக் காட்டுவதும் ஆகும். இது "சிரவணமாகும்". இது புறக் காட்சி ஆகும்.

2. "அறிவது":- தெரிந்ததை இதுதான் என அறிவு பூர்வமாக அறிவதாகும். இது விசாரித்து அறிவதாகும். அதை அடைவதற்கு முயற்சிப்பதாகும். அறிவே ஆழ்ந்தவாகும். இது "மனனமாகும்".



உ

3. "தெளிவது":- இது தெரிந்ததையும் அறிந்ததையும் கூர்ந்த அறிவோடு விசாரித்து தெளிவதாகும். தெளிதலில் தைலதாரை போல் "சிந்திப்பதாகும்" இது "நிதித்யாசனமாகும்"! இதுவே ஸ்வய அனுபவம் பெறும் "அடிப்படையாகும்".

4. "உணர்வது":- இதற்கு விளக்கம் சொல்ல இயலாது. எப்படி என்றால், ஒருவன் பசியையோ, உபாதைகளையோ, ஒருவன் உணர முடியாது. ஒருவனுக்காக ஒருவன் சாப்பிட முடியாது. ஒருவனுக்காக ஒருவன் தாகசாந்தி பண்ண முடியாது. ருசியையும், பசியையும், உபாதைகளையும், அவரவரே உணர முடியும். அதற்கு எந்த விளக்கமும் தர முடியாது.

"இனி கருத்துரைக்கு வருவோம் கவனிக்கவும்"!

உடல் உலக இன்பதுன்ப நுகர்ச்சிகள் புறத்தோற்றத்தில் தெரியும் "நாமரூப குணஇய கற்பனை வடிவமாகும்".

தேவதெய்வ சொரூப ஆனந்தம் (இங்கு இன்பதுன்பம் இல்லவேயில்லை) கற்பனை நாமரூப "ஸத்வகுண" பேரானந்த" மயமாகும். இவ்விரண்டும் முறையாக "தெளிவதும், அறிவதுமாகும்"!

மூன்றாவதாக சொல்லும் தெளிவதென்பது, மேலே கூறிய இரண்டிலும் நாமரூப குணங்களை தள்ளி, அதீதமாக இருக்கும் "அந்த ஒன்றே" அனைத்துமாக இருக்கிறதென்று எந்த கலக்கமும், சஞ்சலமும், பயமும் இல்லாமல் வைராக்கியமாக உறுதி நிச்சயம் செய்து, சங்கல்ப விகல்பங்களை (நினைப்பையும் மறப்பையும்) பூரணமாக ஒழித்து, சந்தேகம் முதலிய சலனமற்றிருப்பது தெளிவதாகும்.

நான்காவதாக சொல்லும் உணர்வதென்பது "நாமரூப குணம் குறி" கடந்த அந்த "காலாதீத ஒன்றே "அனைத்தும் என்றும் அதுவே நாம் என்றும்" "நிற்போதத்தோடு" கூடி இருக்கும் மெய் உணர்வே "உணர்வாகும்".

நாமரூப குணம் குறி பேதத்தோடு மனம் சம்பந்தம் கொண்டிருந்தால் "உணர்வு கெட்டு உணர்ச்சிகள்" தான் மேலோங்கும்.



உள் அகவுணர்வோடு ஒன்றியிருத்தல் "உணர்வாகும்"
புறத்தோற்றத்தில் மயங்கி கலங்குவது "உணர்ச்சியாகும்."
குழந்தைகளே!

இந்த மனமானது "அக உணர்வு கெட்டு"
புறத்தோற்றத்தில் மயங்கி கலங்கி பேத உணர்வோடும்,
பேதமற்ற உணர்வான எண்ணங்களோடும் சுமார் முப்பது
நாற்பது வருடங்கள் "கொடூரகுண கோடி வாஸனைகள்"
ஏறிக்கொண்டிருக்கிறதென்று வைத்துக் கொள்ளுங்கள். இவைகள் ஐந்து வருடங்கள், பத்து வருடங்கள், இருபது வருடங்கள். "அகம் பிரம்ம பாவனை"யோடு இருந்துவிட்டால் உணர்ச்சிகள் கெட்டு உணர்வு மேலோங்கும் என கருதுகிறீர்களா? முடியாது. ஆனால்?

இந்த கலியில் உணர்ச்சிகளை கெடுத்து உணர்வோடு இருப்பது "கடினம்" என்றுநான் இப்பயிற்சியாகிய முயற்சியை எவரும் நாடுவதில்லை.
இந்த மனம் தனக்கினியமாய் ஒன்றை நுகர்ந்து கொண்டிருந்தால் தான் ஆனந்தம் தனியாகத் தோற்றும். அந்த ஆனந்தத்திற்காக திரும்ப திரும்ப ஜனனம் எடுக்கலாம்.
ஆனந்தமே தானான நிலையை எவரும் விரும்புவதும் இல்லை!

ஆனாலும் இக்கலியில்!

அப்படி வறட்டியான ஆத்மஞானம் "சுவைக்காது" என்றும் "அனுபவம் ஆகாது" என கருதித்தான் **"பக்தியோடு கலந்த ஞானானுபவமாக"** இருக்க வேண்டும் என ஓர் "நூதன வழியை கற்பிக்கிறது எம் ரிபு கீதை"! அதாவது?

பாடல் 78 அகம் பிரம்மம் என்ற ஆத்மஞானமானது;
அதிதிடமாய் விவேகத்தில் ஜனிப்பதாகும் என்றும்;
ஆசிரியன் (குரு) கருணையினால் கிடைப்பதாகும் என்றும்; என்றும்,
**"அனவரதம்"** பழக்கத்தால் உறப்பதாகும்
**"அகண்டசிவம்"** கருணையினால் நிலைப்பதாகும் என்றும்;
ஆணித்தரமாக சொல்லப்படுகிறது. இதை கவனிக்கவும். அவசியமாக அனவரதமும், சிவ கூடும் பரியந்தம், அது நீ ஆகும் பரியந்தம், உலக வாஸனை கெடும் பரியந்தமும், உண்மையான மெய்யுணர்வு ஓங்கும் பரியந்தமும் அகம் பிரம்மம், பிரம்மம் அகம் (நாம் அது அதுவே நாம்) என இடைவிடாமல் தவநாதரைப்போல் செய் என்கிறது ரிபு கீதை.



உ

அதுவும் அந்த "அகண்ட சிவம்" கருணையினால் கிடைப்பதாகும்
என்றும் சொல்லும் எம்பிரான்;
"கைவாய சிவனைக் காட்டவில்லை".
அகண்டைகரஸமாக (பிரம்மானந்த சமுத்திரமாக)
இருக்கும்; நாமரூப, குணம், குறி, வாக்கு மனம் எட்டாத
பரம்பொருளை நம் சாதனையின் நிமித்தமாக அதற்கு
ஓர் வடிவம் கொடுக்காமல்; நம் பக்தியின் அனுபவத்திற்காக
ஓர் "**நாமா**" மட்டும் கொடுக்கிறார். அங்கு எந்த உருவமும்
இல்லை, எந்த குணமும் இல்லை; எந்த குறிகளும் இல்லை; எந்த வாக்கும்
இல்லை; இலக்கமோ, தொட்டுக்காட்டுவதோ, சுட்டிக்காட்டுவதோ
"எந்த தடயமும் இன்றி" "**அகண்டசிவம்**"
என்றார். ஏன் என்றால் இந்த குரங்குமனமானது ஏதாவது ஒன்றைப்
பற்றியே ஆடும். அந்த மனக் குரங்கின் ஆட்டத்திற்காகவே
இப்படி ஓர் "**பரசொரூபநாமாவை**" கொடுத்து. இதைப்பற்றி
ஆடும் போது குரங்காட்டம் குறைந்து குறைந்து செயலற்றதாகிவிடும்;
மனக்குரங்கின் ஆட்டம் செயலற்று விட்டால், எம் ஸ்ரீ தாயுமானவர்
வாக்குப்படி:- சிந்தையும் நின்போல் செயலற்று அடங்கி விட்டால்,
வந்த தெல்லாம் நின் செயலாய் வாழ்வோம் பராபரமே!
என்றார்.

இப்படி செயலற்று அடங்குவதை எம்பிரான் அனேக இடங்களில் சுட்டிக்
காட்டுகிறார். அப்படிப்பட்ட பாடல்களை மட்டும் பிரித்தெடுத்து
உங்கள் அனுபவத்திற்காக இதோ தருகிறோம்.

பாடல்
எள்ளளவும் அயலின்றி எல்லாம் என்றும்,
ஏகபரம் பிரம்மமதாய் இருந்த போதும்,
1௦. கள்ளமுறும் மனதுடையோர் (அந்த) பரசிவத்தின்"
கருணையில் வாக்கு குறைந்தால் வேறு வேறாய்,
(தன்) உள்ளமதில் உணர்ந்து மகாபவ துக்கத்தை,
உறுவதனால் மோட்சவெல்லாம் எய்தியதும்,
"தள்ளவொண்ணா பர(ம)சிவம் கருணை பெற்றே"
நமது பவதுக்கத்தை தவிர்க்க வேண்டும்!



உ

பாடல் 15.
சத்திய சித் சுகபரமே எல்லாம் என்றும்,
சந்ததமும் அப்பிரம்மம் நாமே என்றும்,
இந்திரமே திடமான (விடா) முயற்சியோடு,
"எப்போதும்" சிந்தித்து அதுவென ஆவாய்.

பாடல்
16. பின்னமெனத் தோற்றியிடும் இப்பேதமெல்லாம்
பிரம்மமென்றும் "அப்பிரம்மம் நாமே" என்றும்
"உற்ற திடபாவனையால்" மனதை வென்று,
மனதீதான பிரம்மமதாய் அது ஆவாய்!

17. எல்லாமே நாமே என்று இங்கு
பரப்பிரம்மம்
"எப்போதும்" பாவித்து மனதை வென்று,
சொல்லாலும் சொல்ல வொண்ணா பரமேயாகி,
"சும்மாவே" இருந்து அது ஆவாய்!

19. "தூங்காது தூங்கும் நிலை கிட்டுமட்டும்;"
"தொடர்பாக" சிந்தித்து அது ஆவாய்!

20. அகண்ட பரபாவனை செய்து, அந்த பாவனையால்
பொல்லாத மனதை வென்று,
"கலங்காமல்" எப்போதும் அது ஆவாய்!

உக. அதுநாமே என்றும் பாவனையை திடமாய்ச் செய்து
சஞ்சலமாய் உள்ள "மனதை" நன்றாய் வென்று
ஜோதியான பரம் பிரம்மம் நாமே ஆகி
"சும்மாவே" இருந்து அது ஆவாய்!

39. அழியாத அதிஷ்டான அறிவாய் நின்ற
அத்வைதமான பரம் "நாமே என்று"
"சலியாமல்" எப்போதும் நினைத்து அதனால்,
ஸத் சித் ஆனந்த வடிவான அது ஆவாய்!



பாடல் உ

40. மனதின் சாவுதான் மோட்ச நிலை.
மனதை மாய்ப்பதற்காக பிரம்ம பாவனை நிச்சயத்தை
"இடைவிடாமல்" செய்து
மனதை மாய்த்து முக்தி அடைவாயாக.

பாடல் 42. கலங்காத மனதுடனே கற்போல அசையாமல் இருந்து,
"சதந்தமும்" அது நான் என்னும் பாவனை செய்து,
தற்பத சொரூபமே அது நான் என ஆகுவாய்.

43. "ஏகபர பாவனை இடைவிடாமல்"
செய்தால் "மோஹம்" ஒழியும்
நீ முக்தனாவாய் பரசிவத்தின் மீது சத்தியம்!

ஏகபர பாவனை:- (அனந்த ஜீவ கோடிகளும் அண்ட பிண்ட பிரம்மாண்டங்களையும் அனைத்தையும் பரமாக "உணரும்" நிலை)

47. அகம் பிரம்ம பாவனையை அதிதிடமாய் "அனவரதமும்"
அப்யாசம் செய்தால் விறகு தீர்ந்த உடன் அக்னி அணைவது போல்
உன் பிராரப்தம் முடியும் வரை இயக்கம் இருக்கும் அப்புறம் தானே
இயக்கம் நின்று விடும் "அது நீயாகவே" இருப்பாய்.

51. எதுவும் வந்ததும் இல்லை அது இருந்ததும் இல்லை அது மறைந்ததும்
இல்லை. சகலமுமே பிரம்மமயம் என்ற பாவனையை
"இடைவிடாமல், தளராமல்" செய்!
அதுவாகவே நீ இருப்பாய்!

52. அற்பமும் எமக்கு அயலாக ஏதுவும் இல்லை, அந்த
அகண்டபரப்பிரம்ம வடிவான "எம்மில்"
வார்த்தை வடிவில் அன்னியம் உண்டென்று சொல்ல மார்க்கமில்லை
என "எப்போதும்" சும்மா இருந்து "அது நீ" என
ஆவாயாக!



உ

பாடல் 64. ஆரம்ப நிலையில் சகல நூல்களையும் "படித்து அறியலாம்" ஏதாவது ஒன்றில் உன் அனுபவத்தின்படி "ஓர் நூலில் நிலைக்கும்" "அது இது தான்" என்ற முடிவு தெரிந்த பின் "வேறு எந்த நூலையும் தொடாதே" (குருவாக்கியப்படி நிலைக்கும்)

"நாம் அது என்ற "நற்போதம்" நிலைக்கும் வரை, "**இடைவிடாமல்**" அதில் மூழ்குவாயாக. அவசியம் அது நீ என ஆவாய்.

பாடல்.

65. உனக்கு அயலாக தோற்றும் "நாம ரூபம் அனைத்தும்" "நமக்கு அன்னியமில்லை என உணர்ந்து "**உன் மனக்கவலை**" தீரும்மட்டும் இடைவிடாமல் "**தொடர்பாக**" சிந்தித்து அது நீ என ஆவாய்!

69. அசைவில்லாத அந்த அகண்ட நிலை பெற்றோர் இம்மாயா உலகில் பிராரப்தத்தின்படி அவர்கள் தாவம் சஞ்சாரம் செய்தாலும் "துன்பமில்லை, கஷ்டம் கவலை இல்லை, பயம் இல்லை, சஞ்சலம் இல்லை." அவரே இங்கு பிறந்த பிறவிப்பயனை அடைந்து "வந்த காரியத்தை முடித்தவராவார்." "**இடைவிடா**" சிந்தனையால் தான் அது நாம் என ஆக முடியும்.

71. உன் ஸ்ரீ ஸத்குரு சந்நிதியில் உணர்ந்த பின்னர் அது நாம், நாமே அது என்ற பரபாவனையை "**இடைவிடாமல் திடமாய் செய்தால்**" அது நீ என ஆவாய்.

94 லிலும் 95 லிலும் அது நாம் என்னும் அகண்ட பரபாவனையை "**இடைவிடாமல் திடமாய் செய்தால்,**" "அந்த "**கலங்காத**" பாவனையால் மனதை வெல்வாய் என்றும் அந்த "**தாரணமாம்**" பாவனையால் மனோநாசம் செய்வாய் என்றும் ஆணித்தரமாக சொல்கிறார்.



உ

பாடல் 97. அகம்பிரம்மபாவனை "இடைவிடாமல்" செய்தால்,

1. உலக நாமரூப குணதோஷம் நசிக்கும் என்றும்,
2. மனதின் சந்தேகம் நசிக்கும் என்றும்.
3. பிராரப்தம், சஞ்சிதம், ஆகாமியம் ஆகிய மூன்றின நசிக்கும் ஒழிக்கமுடியாது என்று சொல்லக்கூடிய என்றும், "**வாசனையின் பிணைப்புகள்**" அழியும் என்றும் பிரமாணமாகச் சொல்கிறார்.

---

பாடல் 98. பின்பு பார்க்கலாம்.

99. இந்த அகம்பிரம்ம பாவனையை "**தைலதாரை**" போல் "**இடைவிடாமல்**" அப்பியாசம் செய்தால்தான், தூங்குபவன் கையில் உள்ள பூவானது எப்படி தானே நழுவி கீழே விழுந்து விடுமோ அதேபோல் "நாமரூப குணமயக்கம்" உன்னை விட்டு அகலும். அப்போது அது நீயென ஆவாய்.

---

100. இகம் பரம் இரண்டிலும் உள்ள நாமரூப குணமயக்கம்" இல்லவே இல்லை என்று அகம் பிரம்ம அப்பியாசத்தை "**உணர்வு பூர்வமாக அனுபூதி பெறும் வரை**" அப்பியாசித்தால் மரத்தில் பழுத்த பழமானது எப்படி அந்த கிளையை விட்டு தானே இறங்குமோ" அப்படி உடல் உலக குணவாசனை உன்னை விட்டு நீங்கி அது நீயென ஆவாய்.

---

107. அசைக்கமுடியாத இந்த அகம் பிரம்ம பாவனை ஒன்றுமட்டும் "**இடைவிடாமல்**" செய்து வந்தால் என்றுமே இல்லாத நாமரூப குணதோஷம் இல்லாமலே போய்விடும். அங்கிருந்து இருக்கப்பட்டது கால தேச வர்த்தமானம் கடந்த "**ஸ்வயமாக**" இருக்கின்ற "**அதுவே நீ**" நீயே அது என ஆகமுடியும்.

---



உ

பாடல் 98. குழந்தைகளே!

இந்த அகம் பிரம்ம பாவனையை இடைவிடாமல் அப்யாசம் செய்து வந்தாலும் "பரகருணை" இல்லாத வெறும் பேர்களுக்கு இது கிடைக்காதென்றும். ஆகவே மோட்சமெல்லாம் "அகண்ட சிவ கருணை" என்ற பரகருணை வேண்டும் என்னும் வாசகத்தை கண்டு கலங்க வேண்டாம், பயம் வேண்டாம், மயங்க வேண்டாம்.

உறுதியாக சொல்கிறோம்!

1. இது தேவ தெய்வ கருணை அல்லவே இல்லை! "பரகருணை" ஆகும்!
2. இது காலாதீதமான அந்த "பரகருணை".
3. தேவ தெய்வங்களிலும் அதீதமானவர் ஸ்ரீ ஸத்குரு!
4. ஸ்ரீ ஸத்குருவே "பரஸொரூபம்".
5. ஆகவே ஸ்ரீ ஸத்குரு கிருபை அவஸ்யம் வேண்டும்!
6. ஸ்ரீ ஸத்குரு கிருபை பெற வேண்டுமானால் அவஸ்யம் "நாம ரூப குண தோஷங்களை" விட்டே ஆக வேண்டும். இவை அணுப்பிரமாணமும் இருந்தாலும் "பிரமாணமாகச் சொல்கிறோம் "அதிகாரி" யென ஆக முடியாது.
7. ஸ்ரீ ஸத்குருவையும், அவர் அனுபவ வாக்கியங்களையும் அவஸ்யம் சிரத்தையுடன் ஏற்றே ஆக வேண்டும்!
8. வினையின் காரணமாக வரும் "சோதனையும் வேதனையையும்" நம் "பயிற்சிக்கே" (பரிட்சைக்கே) என உள் உணர்வு கொண்டு உங்கள் முயற்சியில் வெற்றிபெற முடியும்.
9. இதன் அனுபவ முயற்சி "குரு திரு நாம தியான வைராக்கியமும்" அவர் ஆத்மஞான பாடத்தில் "வாக்கியார்த்த சிரத்தையும்" வேண்டும்.
10. நீங்கள் "நம் குழந்தைகள்" ஆகவே அனைவரும் "ஜீவன் முக்தர்களே" (உங்கள் நம்பிக்கையே பலிதம் தாஸ் பாபா.)



உ

அன்பின் சொரூபமாயும், அமுத வடிவாயும், பிரம்மானந்த நிலையாயும் அமைந்த "எம் மணி"

முடிவாகவும், கடைசியாகவும், இறுதியாகவும், நித்தியமாயும், ஸத்தியமாயும், பிரமாணமாயும், "எம்மையே அர்ப்பணித்த" "நிலையிலும்" "அறுதியிட்டு கூறுகிறோம்"!

"பாவித்து பாவித்து பரமேயாவாய்!" என்றும்,

"சிந்தித்து சிந்தித்து சிவமேயாவாய்!" என்றும்

ஸத்யவாசகம் அதலினால், உங்களுக்கு இருக்கும் 24 மணி நேரத்தில் "தினமும் அதிகாலை "ஒருமணி" நேரம் மட்டும்" உங்களுக்கு "உண்மை உணர்வைமட்டும் கொடுக்கும்" அந்த "ரிபுகீதையின்" 140 பாடல்களையும் பிரித்து பிரித்து பாராயணம் செய்யவும்.

யாம் இங்கு கொடுத்திருக்கும் அனைத்துப் பாடல்களிலும், இடையுறாது, இடைவிடாமல், அனவரதமும், அவசியம் பாராயணம் செய்து வந்தால், ஓர் காலத்தில், ஓர் நேரத்தில், ஓர் நாளில், உங்கள் மனதிலே "ஓர் நிறைவு" உண்டாகும். அதாவது அறிவு (குரு) சொல்ல, புத்தி (சிஷ்யன்) கேட்டு "புத்தியும் அறிவு சொரூபமாகும்". இது பிரமாண உண்மை!

"அதை எப்படி உங்களால் உணர முடியும் என்றால்?

அறிவு (குரு) சொல்லச் சொல்ல புத்தி (சிஷ்யனானவன்) ஜன்ம ஜன்மாந்திர வாஸனையிலும், இந்த ஜன்ம வாஸனையிலும், உன் தற்காலிக பழக்கவழக்க கர்ம தர்மங்களிலும் "பின்னிப் பிணைந்திருக்கும்" "குணதோஷ வாஸனைகள்" அணு அணுவாக அகல ஆரம்பிக்கும். அதற்கும் ஓர் கால அளவுண்டு.



உ

அது உங்களை விட்டு அகல்வதை எப்படி உணர முடியும் என்றால்?

1. பார்வையிலும் கேட்டலிலும் "வேகம் குறையும்".
2. ஓர் "திருப்தியான ஆனந்தம்" தானே உண்டாகும்.
3. எந்நிலையிலும் எவ்விடத்திலும் "உணர்ச்சி உண்டாகாது".
4. அனைத்து காட்சிகளும் ஓர் "T.V. காட்சியாகவே தெரியும்".
5. அங்கு சிறப்ப சித்திரமாகவே தெரியும்; "விசித்திரமாக தெரியாது".
6. "நியமிக்கப்பட்டபடி" பதுமைகள் "ஆடிக் களிக்கின்றன" என உணரமுடியும்.
7. பின் சிலகாலத்தில் அனைத்தும் "மண்ணுக்கன்னியமில்லை" என்பது தெரியவரும்.
8. பின் சிலகாலத்தில் அவை அனைத்தும் "ஜீவ அணுக்களாக" உணரமுடியும்.
9. பின் அவைகள் அனைத்தும் "ஆத்மஸ்வரூபமாக" தெளிவடையமுடியும்.
10. பின் அவை அனைத்தும் "பரமாத்ம சொரூபமாக" உணர முடியும்.
11. பின் "நாம் அதுவே", "அதுவே நாம்" என தெளிவடைய முடியும்.
12. பின் அனைத்து ஜீவகோடிகளும், அசைவன அசையாதன அனைத்தும் "சர்வசாட்சியாகிய" பரமாத்ம சொரூபமாக உணரமுடியும்.
13. பின் எங்கும் எதிலும் எந்நிலையிலும் "அசைவற்ற ஒன்றாக" உணரமுடியும்.
14. பின் "பிரம்மானந்த சமுத்திரமாக" (அகண்டாகாரமாக) எங்கு நாட்ட இடம் இல்லாமல் நாமும் அதனுள் கலந்துவிட்ட ஓர் "பரப்பிரம்மானந்தநிலை" பெறமுடியும்.
15. அங்கு நாம் தனியே இல்லாத தன்மையில் அதை விளக்கவோ, எவர்க்கும் உணர்த்தவோ, தொட்டுக் காட்டவோ, சுட்டிக்காட்டவோ இயலாத "ஓர் ஸ்வய அனுபவ ஆனந்தமே" ஒன்று நாம் தாமாய் இருக்கும்.

இதை எப்படி எழுதமுடியும்? இதை எப்படி விளக்க முடியும்? அங்கு எண்ணமோ, சொல்லோ, செயலோ, இயக்கமோ, (உணர்வோ) தனியே இருக்க வாய்ப்பில்லை. அனைத்தும் ஒன்றே அது நாமே என்ற பரிபூரண நிலை பெற உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறோம்.

இந்நிலை பெற?

குற்றம் குறைகள், பேத உணர்வுகள், விருப்பு வெறுப்புகள் போன்ற "**குண தோஷங்கள்**" முழுமையாக நீக்கப்பட வேண்டும். "ஓர் அனுபவ பிரமாணம்" மேலே கூறியவைகள் இருந்தால் "மகான்கள் ஆசியோ, தெய்வ தரிசனமும் இருமையும் பெற்றாலும் ஸ்ரீ ஸத்குரு ஆசி முழுமையாக இருந்தாலும்" உங்களால் "**அது நாம்**" என்ற பரிபூரணத்துவம் பெறமுடியாது.



உ

ஓம் ஸத் ஸித் ஆனந்த வடிவமான குழந்தாய்!
**மணி!** மற்றும் எம் ஸத்திய சொரூப குழந்தைகளே!

இந்த பிரம்மானந்தம் எல்லோருக்கும் கூடுவதில்லை. காரணம், பசியின் வேட்கை உள்ளவனுக்குமட்டுமே எப்படி பசியின் "**உணர்வு**" தெரியுமோ, தாக வேட்கை உள்ளவனுக்குமட்டுமே எப்படி தாகத்தின் "**உணர்வு**" தெரியுமோ, இவ்விரண்டும் ஏற்பட்டவன் மட்டும் தான் **அந்த அனுபவ சுவையை உணர** முடியுமோ, மற்றவர்களுக்கு தொட்டுக் காட்டவோ, சுட்டிக் காட்டவோ, விளக்கம் கொடுக்கவோ "எப்படி முடியாதோ" அதே நிலையில், "**ஞான வேட்கை**" உள்ளவர்களுக்கு மட்டும்தான் இதை "அறிவுபூர்வமாக" "**உணர்ந்த**" முடியும். இதுவே பிரமாண உண்மை!

ஓம் அன்பான மணி! மற்றும் எம் மழலைகளே! நீங்கள் எங்கு சென்றாலும், எங்கு இருந்தாலும், உங்கள் உடலைவிட்டு உங்கள் உயிர் எப்படி பிரியாமல் இருக்கிறதோ, அதைப் போலவே உங்கள் **140** பாடல் உள்ள "ஸ்ரீகுருதேவரின்" "**ரிபுகீதை**" மட்டும் உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள். நீங்கள் "ஸ்வய அனுபவம்" பெறும் பரியந்தம் இப்போது எப்படி பாராயணம் செய்கிறீர்களோ, அதே நிலையில் "தனிமையானாலும் சரி," "சேர்ந்து ஆனாலும் சரி," "**அதிகாலையில்**" அதற்கென நேரத்தை ஒதுக்கிக்கொள்ளுங்கள்.

உங்களை ஸ்வய அனுபவ ஞானிகளாக, அதாவது "ஜீவன் முக்தர்களாக, அந்த காலாதீத ஒன்றாக, ஆக்காமல் அந்த அஸ்ததமாகிய யாம்" மறையோம். இது ஸத்யம், ஸத்யம், ஸத்யம்!!!

"**ஆத்மஞான உணர்வே**" எம் ஆசியாகும்!

இந்த நூலின் மூலமாக "நீங்கள் அது என ஆவதே" உங்கள் "**ஸத்குரு காணிக்கையாகும்!**"



உ

ஓம் அருள் ஞானக்குழந்தைகளே!
அறிவு சொரூபமான "மணி"! எம் சிவ
முனிவனின் உத்தமசீடனை நிதாகன் தம்
"வைராக்யத்தில்" சொல்வதை
சற்று கவனிக்கவும்.
பாடல்
134. "குருதேவா" நின் கருணையினால் யாம் இப்போது,
மகிழ் "ஜீவன்முக்தி" நிலை மருவா நின்றோம்.
வேத முறும் பிராரப்தம் "தொலையு மட்டும்",
பிசகறவே "அகம்பிரம்ம" நிச்சயத்தை,
"சாதகமாய் சந்ததமும் சாதிப்போனாய்,"
"சங்கல்ப விகல்பங்களுக்கு இடம் கொடாமல்;
ஆதிமுடி ஒன்றுமில்லா "அகண்டானந்தமான",
ஆன்மாவில் "அனவரதமும்"
"அமர்ந்து மறைவோம்"!!!
எம் அருந்தவச் செல்வங்களே!
சத்புத்திரா! "மணி"!
பிராரப்தமாகிய பாப புண்ணியங்களாகிய "கர்ம தர்மங்களை"
அனுபவித்து முடிந்து நாசம் அடையும் வரை "அகம்பிரம்ம பாவனையை"
"அனவரதமும் இடைவிடாமல்" செய்வோம்,
என சத்திய பிரமாணமாகச் சொல்கிறான் எம் நிதாகன்.
மேலும்?
அவன் சொன்ன காலம் வேறு! நீங்கள் சாதனை செய்யும் காலம் வேறு!
இந்த கோரமான கலி தோஷத்தில் அந்த தோஷம் உங்கள் மனதை பீடியாமலிருக்க அவஸ்யம் "தினமும் ஒருமணிநேரம் அதிகாலையில் அகம்பிரம்ம பாவனையை" இடைவிடாமல் செய்வீர்களாக. இதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். கலிதோஷம் காவு நிறுத்தப்பட்டதே! ஆனால் நீங்களோ
"காலாதீதமானவர்கள்!!" சிவ பாபா.
அதுவே நீங்கள்; நீங்களே அது இது சத்யம்! சத்யம்!! சத்யம்!!!

ஸத்யம் பேசு. (ஸத்ய வாக்கை) தர்மம் செய்.

நாவை அடக்கு. ஓம் கருணையோடிரு.

அன்பும், பண்பும், பணிவும், கனிவும், இதமும், மிதமும்

நிறைந்த எம் அன்புச் செல்வங்களே!

உங்கள் அனைவருக்கும்

எம்பரிபூரண நல்லாசிகள்

உரித்தாகுக!!!



# 2004 வின் புத்தாண்டு வாழ்த்துக்கள்!!!

1. இறைவனை நம்பு அவன் அருளால் உலகில் வாழ்வாய்.
2. இறைவனிடம் வினைகளையும் குருவிடம் மனதையும் கொடு.
3. இறைவனிடம் "எல்லாம் நீயே" என வினைகளை விடு.
4. குருவிடம் "அனைத்தும் நாமே" என மனதால் தொடு.
5. எங்கும் குற்றம் குறை காணாதே.
6. அப்படி கண்டால் அவை உன்னிடமே என உணர்.
7. குற்றம் குறைகளை கண்டால் மற, மன்னி, விட்டுக்கொடு.
8. எது நடந்தாலும் நலமாக எண்ணு.
9. எந்த வார்த்தையிலும் "ராம" நாமாவை இணைத்து பேசு.
10. எதை கொடுத்தாலும், வாங்கினாலும் "ஸ்ரீராம்" என எண்ணி செய்.
11. இறைவன் செல்லக் குழந்தையாக உலகில் விளையாடு.
12. விளையாட உரிமை உண்டு; சொந்தம் கொண்டாட உரிமை இல்லை.
13. தேவைகளும் ஆசைகளும் ஒன்றோடொன்று பிணைந்தது.
14. கோபம் சண்டாளன்; கடும்தாக்கம் காவன்.
15. ஆத்திரம், அவசரம், வேகம் கூடவே கூடாது.
16. பொறுமை, நிதானம், பணிவு அவசியம் வேண்டும்.
17. கண்களால் கண்டதையும் காதால் கேட்டதையும் அப்படியே நம்பிவிடாதே.
18. நீயே ஆத்மா. நீயே பரமாத்மா. நீயே பரப்பிரம்மம். அனைத்தும் நீயே "அதுவே நீ; நீயே அது" இதுவே எம் கீதாச்சாரம்!

பாபா.



ஸத்திய வாக்கு

ஸத்தியம் பேசு. ௐ தர்மம் செய்

நாவை அடக்கு. கருணையோடு இரு.

ஸத்தியம் பேசினால் தர்மம் நிலைபெறும்!

# "ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம், ௐ"!

# "அகம் பிரம்மம் ஜகம் பிரம்மம்"!

# "அகமே எல்லாம்"!

# "ஜகம் பரமும் ஜீவர்களும்"!

# "சிறிதும் இல்லை"!

"ஸ்நானம் செய்தவுடன் செய்யும் பிரார்த்தனை."

"அன்புக் குழந்தைகளே! ஈரவஸ்திரம் கட்டிக்கொண்டு, குவளையிலோ, சொம்பிலோ, நிறைய ஜலம் எடுத்துக் கொண்டு, கிழக்கு நோக்கி நின்று கொண்டு, கீழே கிடக்கும் கருங்கல்லில், ஜலம் விழும் நிலையில், வலக் கரத்தை சின்முத்திரை நிலையில் வைத்துக் கொண்டு, இடக் கரத்தால் சிறிது சிறிதாக ஜலம் விடவேண்டும். விழும் ஜலம் அக்கல்லில் விழவேண்டும். "அப்போது சொல்லும் வாக்கியமாவது"!

"ஹே பரம்பொருளே! இந்த சரீரம் உனது கைபதுமை. இப்பதுமையை வைத்து இனி என்னென்ன காரியம் செய்யப் போகிறாயோ அவை அனைத்தும் உன்னுடையதே. அவற்றின் புண்ணிய பாவ பலன் அனைத்தும் உனக்கே. நடப்பதெல்லாம் உன் செயலே!

எல்லாம் நீயே! எல்லாம் நீயே! எல்லாம் நீயே!

என முடித்துக்கொண்டு மீதி இருக்கும் ஜலத்தை நம் இடக்கரத்தால் சின்முத்திரை வடிவுள்ள நம் கரத்தில் சிறிது சிறிதாக விட்டு அவற்றை நாம் அருந்திட வேண்டும். அப்படி அத்தீர்த்தம் உட்கொள்ளும் போதும், எல்லாம் நீயே இது ஸத்தியம்! எல்லாம் நீயே இது ஸத்தியம்! எல்லாம் நீயே இது ஸத்தியம்! என முடித்து விடவேண்டும்.

— திருபாபு



# "குரு பூர்ணிமா"

## குரு பௌர்ணமி

"அவரவர் "ஸத்குருவின்" பூஜை தினம்"!

எம் அரும் செல்வங்களே!

இந்த ஸத்குருவின் பூஜை தினத்தை **வியாசபகவான் பூஜை**யென்றும், ஸ்ரீமஹான்கள் சொல்வதுண்டு! இங்கு பூஜையென்றால் என்ன என்பதை மட்டும் இரண்டொரு வரிகளில் சொல்லி முடிக்கிறோம். இப்பூஜையென்பது இரண்டு வகைப்படும். அதாவது **"புற உறவு பூஜை", "அக உணர்வு பூஜை"** என இரண்டாகும்.

**1. புற உறவு பூஜை:-** இது மந்திர உச்சாரணத்துடன் புறச் சுத்தத்தோடு செய்யும் "அபிஷேகம், ஆராதனை, ஆரத்தி, நிவேதனம்", என்ற ஓர் "**கட்டுப்பாட்டுடன்**" செய்யும் பூஜையாகும். இது உடல், உலக, உறவுகளுக்கு அவஸ்யம் தெரியும். இதனால் "**அஷ்ட ஐஸ்வர்யம்**" (தனம், தான்யம், பலம், சந்தானம், புகழ், படிப்பு, சௌக்கியம், இன்பம்) அவஸ்யம் பெருகும். இது சகல "போகங்களையும்" கொடுக்கும். இது "தேவ தெய்வங்களின்" பூஜையாகும். இவ்வுலகில் "பொன்னோடு, பொருளோடு, பூவோடு, புகழோடு" வாழத் தான் இப்பூஜை பயன்படும். இது "புண்ணிய கர்மா" சம்பந்தம் கொண்டதாகும். இது காமியத்தோடு செய்து விட்டால் நிலங்கள், இடங்கள், பொருள் கொண்டு "சிலசமயம்" பாபத்தையும் கொடுக்கும். இது "புண்ணிய பாப கர்மாவின்" வித்தாகும். இது முடிவில் ஜனன மரண பீஜமாகும். (விதையாகும்).



உ

பவன் எதிர் பார்த்துச் செய்வதே பூஜையாகும். சொர்க்கத்திற்கும் செல்லலாம். சிறு தவறு ஏற்பட்டாலும் நரகத்திற்கும் போகலாம். இது இந்த இல்லாத உலகை ஆளும் தேவ தெய்வங்களின் காரியமாகும். இது "**ஸத்குரு**" பூஜையாகாது. இது "**புற விருத்தி**" என்று சொல்லக் கூடிய "**பிரவர்த்தி**" மார்க்கமாகும். இது ஓர் "ஸத்கர்மாவாக" இருந்தாலும் இது "**உடல், உலக, உறவு, உணர்ச்சி**"கள், சம்பந்தம் கொண்டதாகும்!

2. **அக உணர்வு பூஜை:-** அக உணர்வு பூஜை என்பது ஸ்ரீ ஸத்குரு சேவையாகும்; இது பூஜையாகாது. இங்கு எந்த மந்திரங்களும் எடுபடாது. "**குரு தேவா**" ஒரே ஸ்மரணையே "**ஸத்குரு பூஜையாகும்**"! இந்த ஒரே ஸ்மரணையே நம் உள்ளத்தில் குருதேவரை ஸ்தாபிப்பதாகும். பின் ஸ்ரீ ஸத்குரு சேவையென்பது மூன்று நிலைப்படும் 1. ஸர்வாங்க சேவை. 2. ஸத்பாவ சேவை. 3 ஆத்மபாவ சேவை என மூன்றாகும்.

1. ஸர்வாங்க சேவையில் ஸ்ரீ குருதேவருக்கு உணவு, உடை இருப்பிடம் இவைகளில் நம்மை முழுமையாக அர்ப்பணித்தல்.
2. ஸத்பாவ சேவையில் அவர் உடன் இருந்து கொண்டே அவர் வார்த்தை அப்படியே ஏற்றுக் கொண்டு சிரவண, மனன, நிதித்யாசனத்துடன் "**அனுபவ**" நிலையில் எந்த மறுப்புமின்றி (தன்புத்தியை அங்கு ஓட விடாமல்) ஏற்று "அது" என ஆகுதல்.
3. ஆத்மபாவ சேவையில் அவரிடம் கேட்ட அனுபவ அறிவில் ஒன்றி கரைந்து மயமாகி அதுவாகவே தாம் இருத்தலாகும்.

பெரும்பாலும் இக்கலியுகத்தில் "ஸர்வாங்க சேவை" கிடைப்பது மிக மிக மிக அரிதாகும். ஆகவே "ஸத்பாவ சேவையாகிய" குருவின் "**வாக்கியார்த்த சிரத்தா சேவை**" ஒன்றே போதுமானது. இதில் ஸர்வாங்க சேவையாகிய பாவ சேவை அவசியம் "**ஒன்றிரண்டு**" கிடைத்து அதுவும் பூர்த்தியாகி விடும்.



எப்படியென்றால் "உணவோ, உடையோ, அவர் இருக்கையோ" உண்மையே நிலை அறிந்து.

**"நேரிடையாகவோ, மறைமுகமாகவோ"**

ஸ்ரீகுருதேவர் பெற்றுக் கொள்வார். "பெற்றுக் கொண்டே தீரவேண்டும்" இது **பரகருணையாகும்!**

ஆனால்?

"ஸத்பாவ சேவையாகிய வாக்கியார்த்த சிரத்தாசேவையே"

**மிக மிக மிக முக்கியம்!!!**

அதுவே பிறவிநோயை இல்லாமல் பண்ணும்!

**ஓர் முக்கியம்!!!**

1. ஸத்குரு ஒருவரே இருக்கவேண்டும்! இருக்கமுடியும்! இருக்க கூடும்.
2. மற்றும் ஸ்ரீமஹான்கள் "பலர்" இருக்கலாம்!
3. ஸத்குரு வாக்கியத்திற்கு ஸ்ரீமஹான்கள் வாக்கை ஒத்துப்பார்!
4. ஸ்ரீமஹான்கள் வாக்குக்கு ஸத்குரு வாக்கை ஒத்துப்பாராதே!
5. ஸ்ரீமஹான்கள் வாக்கு உன் ஸத்குரு வாக்காக உன் அனுபவத்திற்கு உணரத்தோற்றினால், அதை ஸத்குருவே இந்த வடிவத்திலிருந்து உணர்த்துகிறார் என்று உணர்.
6. ஸத்குருவாக்கிற்கு பிறரிடம் விளக்கம் கேட்காதே. ஸத்குரு வாக்கிற்கு ஸத்குருவிடமே **விளக்கம் கேள்.** ஆனால் **மறுப்பு** கேட்காதே! உடனே விளக்கம் புரியவில்லையென்றால் சிறிது காலம் நீ காத்திருக்க வேண்டும். உடனே விளக்கம் தெரிய வேண்டுமென்று **ஆத்திரம், வேகம், அவசரம்** கொள்ளாதே. "குருதேவர்" என்ற ஸ்மரணையிலேயே நீ இருந்தால் அவஸ்யம் விளக்கம் பெறுவாய்!



உ

ஓம் அன்புச் செல்வங்களே! ஓர் குரு ஸ்துதி!

தெளிவு ஸ்ரீஸத்குரு திருமேனி காண்டல்!
தெளிவு ஸ்ரீஸத்குரு திருவார்த்தை கேட்டல்!
தெளிவு ஸ்ரீஸத்குரு திருநாமம் செப்பல்!
தெளிவு **ஸ்ரீ குருவுரு சிந்தித்தல் தானே!!**

அதாவது?

1. ஸர்வாங்க சேவை:— உடல் உணவு இருக்கைகளை நிலை கண்டு, இடம் கண்டு, பொருள் கொண்டு உணர்ந்து சேவை செய்வது.
2. ஸத்பாவ சேவை:— இரண்டற்ற நிலையில், தெளிந்த வகையில், "ஓர்மித்த தன்மையில்" அனுபவ நிலையில் கேட்பது.
3. ஆத்மபாவ சேவை:— அப்படி கேட்டவற்றை "தைவதானை போல்" மனதுப்பண்ணி ஜகத் ஜீவ ஈஸ்வராதிகளை "**தன்னில்**" என்பதைவிட "**அது தாமாக**" உணர்வது. (இங்கு தற்போதம் உண்டு)
4. "**குரு**" என்று சொல்லக்கூடிய அந்த "ஸ்வயஞான "**ஒலி**"யால் அறியாமை (அஞ்ஞானம்) அகன்ற தன்மையினால், "ஸ்வயம் பிரகாச" "**ஒளி**"யே தாமாகி; விலக்க ஒன்று, விளக்க ஒன்று "சிந்தையும் செயலற்ற இடம்"

ஆனால் இவை வார்த்தை விளக்கத்திற்காக கூறப்பட்டதேயன்றி "உண்மையல்ல!

# "உண்மை மஹா மௌனம்"!!!

அருள் ஞானக் குழந்தைகளே!

உங்கள் இதயத்தை உங்கள் ஸத்குரு வாழும் ஆலயமாக்குங்கள். உங்கள் கண்ணீரை உங்கள் ஸத்குருவுக்கு காணிக்கையாக்குங்கள். இதற்கு மார்க்கம்!

"**வைராக்கத்தை**" முதலில் **தெய்வீகமாக்குங்கள்!** பின் "**தெய்வீகத்தை**" குருசொரூபமான "**பரமார்த்திகமாக்** மாற்றுங்கள். உங்களுக்கு இந்த உதவாக்கரை வைத்தியம் உறுதுணையாக இருக்கும் இது ஸத்தியம்.
"அதுவே நீ நீயே அது"

**பாபா.**



(ஸத்திய வாக்கை)

ஸத்தியம் பேசு. ஓம் தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

ஸத்தியம் பேசினால் தர்மம் நிலைபெறும்.

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம், ஓம்"!

அகம் பிரம்மம் ஜெகம் பிரம்மம் அகமே எல்லாம்!

ஜெகம், பரமும், ஜீவர்களும், சிறிதும் இல்லை!!

# "காட்சி நிலையும்"! "சாட்சி நிலையும்"!!

எம் அரும் ஞானச்செல்வங்களே!

உங்கள் நாவடக்கத்தினாலும், வீண் கற்பனையற்ற தன்மையினாலும், அபேத திருஷ்டியினாலும், விருப்பு வெறுப்பு இல்லாத் தன்மையினாலும், ஸ்ரீபகவந்நாம பலத்தினாலும், **"ஸ்ரீஸத்குரு"** வாக்கியார்த்த சிரத்தையினாலும், **"உங்கள்"** (ஆத்மாவென்ற) **"நம்பிக்கை"**யினாலும், உடல் உலக பொருள்களின் நாமரூபகுண தோஷமயக்கங்களை இல்லையென்ற திடமான பரிபூரணமான **"வைராக்கியத்தினாலும்"** அனுபவம் பெற்று, மனதை வென்று **"நாம் அது"** என திகழ்வீர்களாக என ஆசி கூறி வாழ்த்துகிறோம்.

குழந்தைகளே! காட்சியென்றால் "பேத நிலை" யென உணருங்கள். சாட்சியென்றால் "அபேத நிலை" யென உணருங்கள். காட்சியென்றால் உடல் உலக புறச்செயல். சாட்சியென்றால் அக உணர்வு. காட்சியென்றால் நாமரூப குண மயக்கம். சாட்சியென்றால் தேவ தெய்வ நாமரூப குண விளக்கம். காட்சியென்றால் விரிந்து பரந்து மனம் விகாரம் அடைதல். சாட்சியென்றால் மனம் உடல் உலக நாமரூபங்களை ஒன்றாய் ஒடுக்கி, குணங்களை ஏக குணமாக்கி அமைதியும் ஆனந்தமும் பெறுதல். காட்சியென்றால் எண்ணம், சொல், செயலால் விகாரம் அடைந்து விவகரித்தல். சாட்சியென்றால் எல்லாம் இறைவன் செயலென்றும், எல்லாம் இறைவனே என்றும், ஓர் பேரானந்தம் அடைதல்.



உ

எம் செல்வங்களே!

இப்படி காட்சிக்கும் சாட்சிக்கும் இன்னும் விளக்கம் நிறைய கொடுத்துக் கொண்டே போகலாம். அப்படி காட்சியையும் சாட்சியையும் ஒன்றுபடுத்தி உங்கள் உள்ளத்தில் உணர்ந்தால் மட்டும் போதாது. காட்சியை சாட்சியில் ஒடுக்கி அந்த சாட்சியை "அகண்ட பாவனை" யென்ற "சர்வசாட்சியில்" ஒடுக்கிக் கரைத்தால் தான் "ஞானத் தெளிவு" பெறமுடியும். மேலே கூறிய சாட்சி நிலை யென்பது மனிதர்களையும், மற்றும் நடப்பன, ஊர்வன, பறப்பன, நீந்துவன என்ற (கிருமி கீடகத்திலிருந்து உருவில் பெரிய யானை வரையிலும்) "உயிரின" வர்க்கங்களை மட்டும் குறிக்கும். ஆனால் சர்வ சாட்சியாகிய அகண்ட பாவனை "சரம் அசரம்" அதாவது அசைவன அசையாதனவாகிய அனைத்து கோள்களையும் அண்டரண்ட பிரம்மாண்டங்களையும் குறிப்பதாகும்.

இதில் ஓர் வித்தியாசம் யாதெனில்? சாட்சிபாவனை யென்பது மேலே கூறியபடி அனைத்து உயிரினங்களையும் "இறைவனாக" உணர்வதாகும். சர்வ சாட்சியாகிய அகண்ட பாவனையானது சகல அண்ட சராசரங்களையும் "ஆத்மாக" வாக உணர்வதாகும். இங்கு இறைவன் வேறு ஆத்மா வேறல்ல. அதைப் போலவே இந்த ஜீவர்கள் அனைத்தும் இறைவனுக்கும் ஆத்மாவுக்கும் வேறல்ல. பின் ஏன் இப்படி பிரித்துச் சொல்கிறோம் என்றால், இங்கு தொழிலால் அதாவது "உபாதை" யால் வேறுபடுத்திச் சொல்கிறோமே தவிர "பேருணர்வால்" இவ்வனைத்தும் அந்த "காலாதீத ஒன்றுக்கு" அன்னியமில்லை.

1. அனைத்து ஜீவ கோடிகளும் "அறியாமையால்" பிணைக்கப்பட்டிருக்கிறார்கள்.
2. மனித இனம் மட்டும் "மனதால்" பிணைக்கப்பட்டிருக்கிறார்கள்.
3. தேவ தெய்வங்கள் "மாயையை" வைத்துக் கொண்டு அவதியுறுகிறார்கள்.
4. சர்வசாட்சியாகிய "அகண்ட பாவனையானது நாம் அதுவாக இருக்கிறோம் என்ற ஓர் உபாதையால் "தனித்து" நிற்கிறது.
5. அந்த காலாதீத ஒன்றானது மேலே கூறிய அனைத்துமாயிருந்தாலும்,



உ

தற்போதமான
து எச்செயலுமற்று, நான் இருக்கிறேன் என்ற
இருப்புத்தன்மையுமற்று, இல்லையென்ற இருப்புத்தன்மை
யும் (இல்லையென்றால் உண்டு என்றும் உண்டென்றால் இல்லை
என்றும் உட்பொருளும்) அற்று, எந்த வாக்கினாலும் சொல்ல
முடியாத **"பரப்பிரம்மானந்த
அகண்டைகரஸமாக"** இருக்கிறது, ஆனால்
**இல்லை!** (வாக்கும் இல்லை)

ஞானக்கனிரஸங்களே! குருசிஷ்ய பாவனையில்
கேள்வி பதிலாக சில விளக்கம் தருகிறோம். சிரத்தையுடன் உணர்ந்து
உங்கள் அனுபவத்தில் கரைந்து கலந்துவிடுவீர்களாக!

சிஷ்யன்:— குருதேவா பக்தி என்றால் என்ன?

குரு:— குழந்தாய்! பக்தி அல்ல பக்தீ என்றால் என்னவென்று கேள்?

சிஷ்யன்:— ஹேபிரபோ! இதுகாலபரியந்தம் பக்தி என்றுதான் சொல்லக்
கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அதை பக்தீ என சுழிபோட்டு
பேசுவதன் அர்த்தம் என்ன? பக்தி வேறு பக்தீ வேறா? அல்லது
இரண்டும் ஒன்றா? அல்லது இதில் செயலில் மாறுபாடு உண்டா?
பக்தியென்றால் என்ன? பக்தீ என்றால் என்ன?

குரு:— குழந்தாய்! இது முக்கியமான கேள்விதான். பக்தி வேறு,
பக்தீ வேறுதான்.

சிஷ்யன்:— அப்படியானால் அதை சற்று விளக்கி அருளுங்கள்.

குரு:— குழந்தாய்! 1. பக்தி என்றால் பூஜை, புனஸ்காரம், அபிஷேகம்,
ஆராதனை, ஆரத்தி, நிவேதனம் என்று சொல்லும் புறச்செய
லாகும். இதை "சோடச உபசாரம்" என்றும் சொல்வதுண்டு.
2. பக்தீ என்றால் உள்ள உருக்கம், உள்ள கனிவு, உள்ளத்
தில் இருக்கும் மாசு மறுவாகிய குற்ற உணர்வுகளை,
குருசன்னிதானத்தில் மானசீகமாக முறையிட்டு முறையிட்டு
வேண்டி, வேண்டி, அழுது, அழுது, மனம் பாகாக உருகி, உருகி



# "நம் வினைகளை எரித்தலே பக்தியாகும்"!

சிஷ்யன்:- குருதேவா! இதை அக்கினி என்று சொல்லக் காரணம் என்ன? இந்த அக்கினி தோற்றுமா? தோற்றுமே எரிக்குமா? இந்த அக்கினி வேறு ஜடராக்கினி வேறு? சற்று விளக்கி அருள வேண்டும்?

குரு:- ஆமாம் குழந்தாய்! ஜடராக்கினி வேறு! பக்தி என்ற அக்கினி வேறு தான். உண்ணும் ஆகாரங்களை எரித்து உடலுக்கு சக்தி கொடுக்கப்பட்டது ஜடராக்கினியாகும். நம் வினைகளை (புண்ணிய பாபங்களை) எரித்து அதாவது எண்ணங்களால் பாரமான மனதில் அந்த "எண்ண வினைகளை" எரித்து மனதின் பாரத்தைக் குறைத்து "ஆத்ம சாந்தியை" உண்டு பண்ணுவது பக்தியாகும்.

சிஷ்யன்:- இவ்விரண்டும் இயங்குவதை எப்படி அனுபவத்தால் உணர முடியும்?

குரு:- சாப்பிடும் பொருள்களை எரிப்பது பற்றி விளக்கத் தேவையில்லை. ஆனால் பக்தியால் வினைகள் எப்படி எரிகின்றன என்பதை சற்று விளக்கிச் சொல்ல வேண்டியது அவசியமே.

குழந்தாய்! இறை கருணை பெறுவதற்கும் குரு கிருபை பெறுவதற்கும்

## "அழுதால் உன்னை பெறலாம்"!

என்ற அனுபவ ஞானிகளின் வாசகப்படி "அவலமாய் முடியும் வாழ்க்கையை நினைத்து அழுவோம்." "வீணே காலங்கள் கழிகின்றதே என எண்ணி எண்ணி அழுவோம்." "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ என எண்ணி எண்ணி அழுவோம்." "இறைவனை அடையவந்த நாம் வீணே இரையைத் (உணவை) தேடி அலைகின்றோமே என எண்ணி அழுவோம்." இந்த நிலையில் "வீண்காலம்" கடந்து போவதை எண்ணி எண்ணி அழுவோம். இப்படி அழும் போது பெருகும் பக்தி என்னும் அக்கினியானது நம் உள்ளம் என்ற எண்ணத்தில் எழும் "வினைகளை" சுட்டெரித்து சாம்பலாக்கி அச்சாம்பலை கண்ணீர் என்னும் புனித ஜலத்தால்



உ

அலம்பி அலம்பி, கழுவி, கழுவி, உள்ளத்தை தூய்மை ஆக்கிவிடுகிறது.

குழந்தாய்! பக்தியில் உருகி அழும்போது உள்ளம் ஈரத்துணியை கசக்கி பிழிவதைப் போல் ஓர் உணர்வு உண்டாகும். மயிர்க் கூச்செரியும். உடம்பை மறப்பது (மறந்து போவது) போல் ஓர் உணர்வு உண்டாகும். அங்கு உள்ளத்தில் வேறு "எண்ணங்கள் ஏதுவும் இல்லாத் தன்மையாலும், வேறு எண்ணங்கள் தோன்றாத் தன்மையாலும்" மனம் பாரம் இல்லாமல் லேசாக இருக்கும். அங்கு இறை உணர்வு நிரம்புவதால் ஓர் **"ஆனந்தம்"** அவசியம் உண்டாகும். இந்த ஆனந்தமானது விட்டு விட்டு வரும். அது நிரந்தரமாய் இருப்பதற்கு இறை கருணை அவசியம் வேண்டும்.

சிஷ்யன் :— குருதேவா! இறைகருணையால் இந்த பக்தி என்ற அக்கினி மூளுமா? அல்லது பக்தி என்ற அக்கினி பற்றிய பின் தான் இறை கருணை கிடைக்குமா?

குரு :— குழந்தாய்! இந்நிலை பெற **"பூர்வ புண்ணியம்"** வேண்டும்.

சிஷ்யன் :— பூர்வ புண்ணியம் இல்லாமல் இது சாத்தியமாகாதா?

குரு :— அவசியம் பூர்வ புண்ணியம் வேண்டும். அப்பூர்வ புண்ணியத்தால் "இறை கருணை முதலில் கிடைக்கும்" இரண்டாவது அந்த "இறை கருணையால் தான் பக்தி என்னும் அக்கினி பெருகும்." ஆனால் இந்த இரண்டும் சங்கிலிக் கோர்வை போன்று ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டதாகும். "ஒன்றில்லையானால் மற்றொன்று இல்லை" என்றே சொல்லலாம்.

சிஷ்யன் :— குருதேவா! இதனால் தான் எல்லாம் "ஈசன் செயலென்றும்" "நடப்பதெல்லாம் நாராயணன் செயலென்றும்," "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்றும் சொல்லப்படுகிறதோ?

குரு :— உண்மைதான் குழந்தாய்! நீ கூறிய மேலே உள்ள மூன்று வாசகங்களும் சத்திய வாசகம் தான். இதில் ஓர் உண்மை என்னவென்றால், மனம் என்றும் வினை என்றும் இரண்டு விதமாகப் பிரிந்து, அதனால் இந்த இயக்கம் நடைபெறுவதால் "கட்டுப்பாடு இம்மனதிற்குத் தான்"

உ



வேண்டுமே தவிர, தாவரத்திற்கல்ல என முதலில் உணர வேண்டும். தாவரம் புண்ணிய பாவம் எனப் பேசப்படுவதே யன்றி தாவரம் தாமாக இயங்குவதில்லை. தாவரம் ஓர் ஜடமே; அதுவோர் "மண் பொம்மையே" (மண் என்ற மாமிச பதுமையே)

சிஷ்யன்:— குருதேவா! இந்த மனத்திற்கும் அது இயக்கும் உடலுக்கும் ஒற்றுமை வேற்றுமை என்ன?

குரு:— எம் அரும் செல்வா! வினை (உடல்) இல்லாமல் மனம் இயங்காது. மனம் செயல்படாமல் வினை உடல் இயங்காது. இதுவே ஒற்றுமை. ஆனால் வினை உடல் தாவரங்களுக்குத் தோற்றப்படும்; அந்த வினை உடலை ஆட்டி வைக்கும் மனம் தாவரங்களுக்குத் தோன்றுவதில்லை இதுவே வேற்றுமை.

**"மனம் எண்ண வடிவம்"!**
**"தாலம் இயக்க வடிவம்"!**

மனம் சூட்சமம்; தாவரம் ஜடம். இயங்க வைப்பது சூட்சமம்; ஆனால் இயங்குவது தாவரம். ஆனால் இங்கு ஓர் விஷயம் என்ன வென்றால் "வினை தோன்றுவதில்லை. அதன் இயக்கம் தோன்றும்." இங்கு வினை தொடரும் காரணம் என்ன வென்றால் ஓர் தாவரம் அதன் வினைப்படி "ஆடிக் கொண்டும் பேசிக் கொண்டும் இருக்கும். இதை மற்றோர் தாவரத்தை இயக்கும் மனமானது குற்றம் குறைகளாகவும்; பேதபார்வையாகவும், விருப்பு வெறுப்பாகவும் **"தப்புக் கணக்கு"** போட்டு "தன் வினையை முடிய விடாமல் தொடரப் பண்ணிக் கொள்கிறது". இதனால்தான் கண் போன போக்கிலேயும் காது கேட்கும் ஓசைகளிலும் மனதைச் செல்ல விடாதே என மஹான்கள் சொல்வதுண்டு.

சிஷ்யன்:— வினையும் (தாவரமும்) மனமும் (சூட்சமமும்) இப்படி பின்னிப் பிணைந்து விளையாடும் விளையாட்டில் இறைவன் ஏதாவது சம்பந்தம் கொள்கின்றானில்லையா?

குரு:— குழந்தாய்! இதில் இறைவன் பங்கேற்பதில்லை. அவன் இவ்விரண்டுக்கும் சாட்சியாகவே இருக்கின்றான்.



உ

சிஷ்யன்:— எம் குருதேவா! இங்கு இறைவன் மறு கேற்பது இல்லையென்றால் அவனை ஏன் இங்கு நினைக்க வேண்டும்? எல்லாம் அவன் செயலென்றும், நடப்பதெல்லாம் நாராயணன் செயலென்றும், அவனன்றி அணுவும் அசையாதென்றும் சொல்வதாமே ஏன்?

குரு:— குழந்தாய்! இது நல்ல கேள்விதான். இதை நன்கு கவனி.

1. உலகமும், உலக பொருள்களும் அனைத்தும் "அவனுடையது". "விளையாடக் கொடுத்தானேயன்றி "உரிமை" கொண்டாட கொடுக்கவில்லை." நீ அவனுடையதாக எண்ணி விளையாடினால் வினையும் தொடராது. வினையால் வந்ததாவும் அவ்வினையை (பிராரப்தத்தை) முடித்து நாமும் முடிந்துவிடும்.

2. "நீ உன்னுடையதாக உரிமை கொண்டாடி விளையாண்டால் மனமும் அந்த உரிமை என்ற எண்ணத்தால் அழிவதில்லை. உரிமை முடியாத் தன்மையினால் வினைத்தொடர்பும் முடிவதில்லை."

இங்கு இறைவனின் மாயை வைத்து "இல்லாததை இருப்புடையதாக" அதாவது மண், மலை, மரம், செடி, கொடி முதலியவைகளை "**மாயா**" சிருஷ்டியாகவே தோற்றச் செய்தான்.

இல்லாததை இருப்புடையதாக:— பரசொரூபமான இல்லாத ஒன்றை "பொன்" "**மண்**" என்று சொரூபமாக இருப்பதைப்போல் தோற்றம் உண்டாக்குமென்றும் "ஆனால் அது இல்லை."

இறைவனின் அம்சமான இந்த ஜீவன் (மனிதன்) அந்த இல்லாததை மேலும் வசீயம், கவர்ச்சி, அழகு இவைகளைத் தன் மனதின் மூலமாக கற்பனை பண்ணி அந்த இறைவனின் சிருஷ்டியாகிய மாயா தோற்றத்தை (மண்ணை) "**பொன்**" விதவிதமான ஆபரணங்களாக்கி அந்த அழகில் மனதால் மயங்கி "**நான்**" செய்தேன் என்றும், "**என்னை**" தான் முழுந்தது என்றும் இவை அனைத்தும் "**என்னுடையது**" என்றும் மனமடமையால் "**உரிமை**" கொண்டாடியதே இம்மனதின் பாரமும் தாவவினையின் ரகசியமும் ஆகும்.



## ௨

சிஷ்யன்:- குருதேவா! மனம் சூட்சமம் என்றும், வினை தாவம் என்றும், தாவத்தின் இயக்கம் மனம் என்றும், இந்த மனம் தான் உரிமை கொண்டாடியதால் தான் வினைப் பெருக்கமும் அதனால் ஜனன மரணம் உண்டென்றும் தாங்கள் திருவாயிறல் பசுமரத்தாணி போல் உள்ளத்தில் பதிய வைத்துக் கொண்டோம். ஆனால் இன்னொரு முக்கியமான கேள்வி இது எமக்கல்ல இங்கு எல்லோர்க்குமே அவர்கள் உள்ளங்களை "**செல்லரித்துக்**" கொண்டிருக்கிறது. அதாவது மலை கறையான் போல் உள்ளேயே அரித்துக் கொண்டிருக்கிறது.

குரு:- அது என்ன குழந்தாய்! செல்லரிப்பது என்றால் அது என்ன? அது எங்கிருந்து வந்தது? எப்படிப் புகுந்தது? அது என்ன செய்து கொண்டிருக்கிறது?

சிஷ்யன்:- எம் குருதேவா! சேவை என்றால் என்ன? வேலை என்றால் என்ன?

குரு:- சொல்லிச் செய்வது வேலை! சொல்லாமல் உணர்ந்து செய்வது சேவை.

சிஷ்யன்:- இவ்விரண்டும் மனதின் இயக்கம் தானே?

குரு:- ஆமாம் குழந்தாய்! இவ்விரண்டும் மனதின் இயக்கமே. மனம் இல்லையானால் இயக்கம் ஏது? இவ்விரண்டும் மனதின் இயக்கமாக இருந்தாலும்,

௧. "பிராப்தம் மனதின் இயக்கமாக உருப்படும் போது அது வேலையாகிறது. அதை உன்னால் நிறுத்தவோ, கூட்டவோ, குறைக்கவோ முடியாது. அது மனதால் எண்ண வடிவில் இயங்கி ஓர் கருவியாகிய தாவத்தை இயங்க வைத்து விடும். அதில் வினையாகிய பிராப்தம் முடிவுறும்" ஆனால்?

௨. "ஆகாமியம் மனதின் இயக்கமாக இருந்தாலும் அது இத்தாவத்தை இயக்கும் போது "**இறை குருநாமாவில்**" சர்வார்ப்பணமாக இயங்கி அப்போது நடைபெறும் கர்மாவை பிராப்தத்திலோ சஞ்சிதத்திலோ சேர விடாமல் செய்து அது "**சேவை**"யாக முடிவுறும்."

சிஷ்யன்:- குருதேவா! இவ்விரண்டுமே கர்மாவாக இருப்பதனாலும், ஒரே இயக்கமயமாக இருப்பதனாலும் எப்படி இது பிராப்தம் என்றும் இது ஆகாமியம் என்று கண்டு கொள்வது? எங்களுடைய பார்வைக்கு



உ

இரண்டும் ஒன்றுகத்தானே தோற்றுகிறது. எங்களுக்கு ஏது வேலையென்றும் ஏது சேவையென்றும் உணர முடியவில்லையே? ஏனென்றால் மனம் இல்லையானால் இயக்கம் இல்லை என்று தெரிகிறது. இதில் சற்று குழப்பமாகவே இருக்கிறது இதற்கு சற்று விளக்கம் எங்கள் அறிவில் பிரகாசிக்கும்படி அறிவுறுத்தவும்!

குரு :- நன்றாக சொன்னாய் குழந்தாய்! உன் வாக்கே "எங்கள் அறிவில் பிரகாசிக்க வேண்டும்" என வருகிறது யார் அது தான் உண்மை. இதை உணரவும்!

1 "பிராப்தம் இயங்கும் போது அங்கு "**மனம், புத்தி, அகங்கார**"மாக செயல்படுகிறது. அதாவது எண்ண வடிவமானது கற்பனையை விரித்துக்கொண்டு செயல்படுகிறது".

2. ஆகாமியம் இயங்கும் போது அங்கு "**அறிவு**" வேலை செய்கிறது. அங்கு வேறு கற்பனைகள் தோன்றுவதில்லை.

சிஷ்யன் :- இதை நாங்கள் எப்படி உணர முடியும் அது மனம் புத்தியின் அகங்காரமா? அறிவா? இவைகளின் இயக்கம் ஒரே மாதிரியாக இருப்பதால் ஒரே குழப்பமாக இருக்கிறது. உதாரணத்திற்கு ஓர் நிகழ்ச்சியை குறிப்பிட்டு காட்டுகிறோம்.

அதாவது :- ஓர் சாதனையாளன் ஓர் அலுவலகத்தில் பணி புரிகிறான். "நேரம் தவறாமல்" வேலைக்குச் செல்கிறான். குறிப்பிட்ட வேலையை சிறப்பாக செய்து முடிக்கிறான். "வேளை தவறாமல்" தன் துணிமணிகளை அலசுகிறான். ஒழுங்காக ஸ்நானம் செய்கிறான். அந்த வேலைக்கு தகுந்த ஆடை அணிகளை அணிந்து கொள்கிறான். "வேளா வேளைக்கு" சாப்பிட்டுக் கொள்கிறான். உறவினர்களையோ நண்பர்களையோ "குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட இடத்தில்" சென்று பார்த்து தன் காரியங்களை முடிக்கிறான். அவனுடைய சொந்த பந்த அனைத்து காரியங்களையும் "குறிப்பிட்ட காலங்களில்" செய்து முடித்துக் கொள்கிறான். ஆனால்? நாங்கள் அவனை "அப்பாவை தரிசிக்க குடிலுக்கு வரவில்லை" என கேட்டால் அவன் பதில் :- "**அப்பா அழைக்கவில்லை எண்ணம் உணர்த்தவில்லை**" என் சொல்கிறான்!



உ

சிஷ்யன்:– எம் குருதேவா! "அனைத்துக் காரியங்களையும் காலமறிந்து, இடம் அறிந்து, தேவையறிந்து, சபையறிந்து நடத்தும் அவன் "அம்பா" இந்த ஒன்றிற்கு மட்டும் நடத்த முடியாக் காரணம் என்ன என கேட்கவா? அல்லது அவனுக்கு பிராப்தம் (விதி) இல்லையெனத் தள்ளவா? அல்லது அவனுக்கு சிரத்தை இல்லையெனச் சொல்லவா? அல்லது அவனுக்கு குருதெய்வ பற்றை விட "தொழில்பற்று" அதிகமான சொல்லவா? இப்படி இன்னமும் அனேக கேள்விகள் எங்கள் அனைவருக்கும் தோன்றுகிறது. "இந்த ஓர் சம்பவம் உதாரணமே யன்றி உண்மையல்ல" இப்படி அனேக சம்பவங்களை எடுத்துக் கொள்ள வரும். இதில் எங்கள் கேள்வியெல்லாம் எல்லாம் ஈசன் செயலென்றால் இப்படி "பேதம்" வரக்காரணம் என்ன? குருதேவர் இச்சம்பவத்தையும் கேள்விகளையும் கேட்டு கடகட கடகட கட வெனச் சிரித்தார். பின்பு அவர் பதில் சொல்கிறார் கவனமுடன் கேட்கவும்.

எம் அரும் தவச் செல்வங்களே! உங்கள் கேள்விக்கேற்ற ஓர் பழமொழியை கேட்கவும். "**காணம் என்றால் வாயைத் திற! கடிவாளம் என்றால் வாயை மூடிக்கொள்!**" என்ற கதை போன்று நீங்கள் மட்டுமல்ல, உலக அனைத்து ஜீவர்களுக்கும் இதே நிலை தான். இதன் உண்மையை உணர்வீர்!

"காணம் என்றால் உடல், உலக, உறவு, பொருள்களாடும் மனம்! கடிவாளம் என்றால் தெய்வீக உணர்வைப் பெறும் சாதனம்! (அறிவு)

இவ்விரண்டுக்கும் மனமே சாதன சாத்தியமாக அமைகிறது. உடல் உலக உறவு பொருள் மயக்கத்தில் இந்த மனம் ஈடுபடும் போது ஓர் "**போதை**" மயக்கம் ஏற்படும். தெய்வீக உணர்வை பெறும்போது ஓர் "**ஆனந்த**" தெளிவு ஏற்படும். (இது அறிவு) போதைமயக்கத்திலேயே ஈடுபடும் ஜீவனுக்கு அது சம்பந்த பொருள்கள் நித்தியமாகவும் ஸத்தியமாகவும் தான் தோற்றுமேயன்றி என்னதான் பொய் பொய் என்றும் அநித்தியம் அநித்தியமென்றும் கோடானு கோடி முறை எடுத்து எடுத்து ஓதினாலும் "**ஜகப்பழக்க தோஷ வாஸனை**" சாமான்யமாகப் போகாது. போகவும் கூடாது. அப்படி போனால் இறைவன்



உ

சிருஷ்டிக்கு மதிப்பில்லாமல் போய்விடும்!
அவனுடைய மாயைக்கு பங்கம் ஏற்பட்டுவிடும்!
"மாயையில் தோன்றிய மனதிற்கு
**"வல்லமைகள்"** இல்லாமல் போய்விடும்!
எல்லோருமே பக்தர்களும் ஜீவன் முக்தர்களாகவே
ஆகிவிட்டால் உலகம் என ஒன்று இருந்தும் பிரயோஜனம்
இல்லாமல் போய்விடும்! இப்படி போய்விட்டால்!!!
அம்மா அப்பா பிள்ளைகள் எங்கே? அண்ணன் தம்பி அக்காள் தங்கை
எங்கே? மாமன் மாமி மற்றும் உறவுகள் எங்கே? பொன் பொருள்
பெண்ணின்ப போக மயக்கம் எங்கே? இப்படி நிறைய எழுதிக்
கொண்டே போகலாம். இதை கவனி!
"தானும் என்ற உடல் உலக உறவு பொருள்களை நித்திய ஸத்திய
மாக ஏற்பது **மாயாமனமாகும்**!"
"கடிவாளம்" என்ற **"கட்டுப்பாட்டுக்கு"** இசைந்து
அதை அன்பாகவும் பணிவாகவும் கனிவாகவும் ஏற்பது **"அறிவு"**!
1. இங்கு மனம் "மோஹமாகவும் வேகமாகவும்" செயல்படும் போது
அறிவு மௌனமாகிவிடும்.
2. உன்னுடைய பலகால சாதனையால் அறிவானது "பொறுமையாகவும்
அன்பு கருணையாகவும்" செயல்படும் போது மனம் அறிவுக்குள் சென்று
தன்மயமாக்கிக் கொள்ளும். அங்கு அறிவு ஒன்றே இருக்கும்.
அவஸ்யம் மனம் இராது!
குழந்தாய்! இங்கு உன் கேள்விக்கு பதில் என்ன வென்றால்?
நீ சொல்லும் சாதனையாளன் மட்டுமல்ல ஏனைய சாதனை செய்யும்
அனைத்து குழந்தைகளும் "புத்திசாலியாக" இருக்கிறீர்களே என்று
அறிவாளி" ஆகவில்லை என்றேயாம் சொல்லுவோம். இதன் முக்கியம்
என்னவென்றால் "உடல் உலகிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்.
இறைகுருவுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை". அதனால் உங்கள் கவனம்
சிதறடிக்கப்படுகிறது. அந்த கவனக்குறைவால் "ஊருக்கு எளியவன்
பிள்ளையார் கோயில் ஆண்டியாம்" என்ற வாசகத்தின்படி இந்த



உ

உதவாக்கரை (உதவ அக்கறையுடன் இருக்கும்) அப்பன் மேல் அவர் அழைக்கவில்லையென்றும் அவர் உணர்ந்தவில்லையென்று ஓர் பாரத்தைதூக்கி அவர் தலையில் போட்டுவிட்டால் இதை ஏன், எதற்கு, எப்படி, என கேள்வி கேட்கவா போகிறார்? என்ற "மனோதைரியத்தோடு" ("அறிவாற்றலோடு அல்ல") சொல்லிவிடுகிறீர்கள். யானும் சர்வசாட்சியாக இருப்பதால் நீங்கள் என்ன சொன்னாலும், என்ன செய்தாலும், சிரித்துக்கொண்டே "ஆமாம் சாமி" போட்டுக் கொண்டிருக்கிறேன்.

"உன்னுடைய அப்பா உலக நடைக்கும், தெய்வீக இயக்கத்திற்கும் "சாட்சியேயன்றி, காட்சி அல்ல"/ நீ அப்பா அழைக்கவில்லையென்றே, அப்பா உணர்ந்தவில்லையென்றே அப்பா கண்டிக்கமாட்டார் என்றும் அப்பா தண்டிக்கமாட்டார் என்றும் "மனோதைரியத்தில்" (ஸ்திரமான அறிவு அல்ல) உன்னை நீயே ஏமாற்றிக் கொள்கிறாய் எனப்பிரமாணமாகச் சொல்லுவோம்/ அப்படியானால் நீ எப்படி சொல்லவேண்டுமென்றால் எம் வினையின் பளு எம்மை அழுத்திக் கொண்டிருப்பதனால் "எம்மால் இயலவில்லை" என்றால் அது ஸத்திய வாசகமாகும். அங்கு உன் வினையை அனுபவித்துமுடித்துவிடுகிறாய். இதன் உண்மை என்னவென்றால்?

எம் அரும் ஞானச்செல்வங்களே/ உங்களுக்குள்ளேயே மனமும் (புத்தியும்) அறிவும் (தெய்வ குருகிருபையும்) இருக்கிறது. யாம் மேலே சொல்லியபடி புத்தி பிரகாசிக்கும் போது அறிவு மறைபடுகிறது. அறிவு பிரகாசிக்கும் போது புத்தி மறைந்துவிடுகிறது மேலும் உங்கள் பிராப்த கர்மாவின்படி "தாலம் இயக்கப்படுகிறது" இதையே விதியென்றும் வினையென்றும், "விதியின் வழியே மதி செல்லும்" என்ற பழமொழிப்படியும் சாத்தியமாய் நடைபெறுகிறது.



உ

உடல் உலக பிரவர்த்திக்குத் தான் நீங்கள் முக்கியத்வம் கொடுக்க முடியும். அதை மீற உங்களுக்கு வலிமை இல்லையென்றே யாம் சொல்லுவோம். நீங்கள் சற்று மீறினாலும் உங்கள் மதியை உங்கள் விதியானது திசை திருப்பத்தான் செய்யும். "அதையும் மீறி இறை குரு உணர்வுக்கு நீங்கள் தரும் உழைப்பு" செய்வதே சாதனையாகும். மொத்தம் கலைகள் 16 என்று சொல்லப்படுகிறது. அதைப்போலவே உங்கள் உழைப்பும் 16 பங்கு ஆகும். அந்த 16ல் ஒரு பங்கு உங்கள் இறைகுருவுக்கு செலுத்தினால் போதும். அது உங்கள் சாதனையை அனுசரித்து காலாகாலத்தில் அவசியம் "நிறை நிலை பெற்றுவிடும்."

ஆனால்?

எம் செல்வங்களே! நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்றால்? அப்பா அழைத்ததில்லை என்றும்; அப்பா உணர்த்தவில்லை என்றும்; உங்கள் மனதிற்கு ஓர் திருப்தியை கொடுத்தும்; உங்கள் அறிவிற்கு ஓர் திரையிட்டுக்கொண்டும்" **உங்கள்** (எம்மை) ஏமாற்ற முயல்கிறீர்கள். உங்களின் இது தவறான கருத்தாகும். உன் அப்பா சாட்சியென்பதற்கு சில காரியங்களை குறிப்பிடுகிறோம். காட்சிகளில் மயங்கி இருப்பது உன் அப்பாவின் உணர்வா? அவர் சொல்லியா?! ருசியில் மயங்கி அதிக உணவு உண்பது உன் அப்பாவின் உணர்வா? அவர் சொல்லியா?! பணத்திற்காக ஓவர் டைம் பார்ப்பது உன் அப்பாவின் உணர்வா? அவர் சொல்லியா?! கை நிறைய பணம் வாங்கி உன் சுய தேவைகளை பூர்த்தி செய்வது உன் அப்பாவின் உணர்வா? அவர் சொல்லியா?! இப்படி உன் உடல் உலக உறவுகளை பக்கம் பக்கமாக எழுதிக் கொண்டே போகலாம். இவை அனைத்தும் உன் அப்பாவின் உணர்வா? அவர் சொல்லிச் செய்கிறாயா? ஆனால் இவை அனைத்தையும் யாம் சாட்சியாக கண்காணித்துக் கொண்டுதான் இருப்போமே தவிர "குறைவு நிறைகளை" யாம் சுட்டிக்காட்டுவதில்லை. அதன் கண்டிப்பும் தண்டிப்பும் எமக்கு தேவையும் இல்லை. "வினை விதைத்தவன் வினை அறுக்கிறான்" என்றிருப்போம்.



உ

எமக்கு வேண்டிய தெய்வாம்சம் "உன் கள்ள மனம் உன் (எம்) நல்ல அறிவோடு இணைந்து கரைந்து கலந்து விடுவது மட்டுமே"! உன் உடல் உலகமும் அதிலுள்ள விஷயங்களும் உன்மனமும் எமக்கு வேண்டாம். பணிவு, சேவை, கருணை, பொறுமை, நம்பிக்கை, வைராக்கியம், ஆகிய இந்த ஆறும் கலந்த தெய்வீக உணர்வான **மெய் அறிவில் கலந்து"** விடுவாயாக. அதுவே எமக்கு வேண்டும்!

சிஷ்யன்:- எம்பெருமான் குருதேவா!

தாங்கள் கூறிய அனைத்தும் எம் உள்ளத்தில் பசுமரத்தாணி போல் பதிந்து விட்டது. எங்கள் புத்தியின் சுபாவமானது அந்த புத்தியையே அறிவாக பாவனை பண்ணி அதை எங்கள் குறையென்று உணராமல் குருதேவர் அழைக்கவில்லையென்றும், குருதேவர் உணர்த்தவில்லையென்றும் தவறான கருத்துக் கொண்டிருந்தோம்.

குரு:— எம் செல்வமே! இந்த ஜீவர்களின் பழக்க வழக்கம் எப்படி இருக்கிறதென்றால் "குற்றம் குறைகளை தன்னுடையது எனபாவனை செய்யாமல் பிறர்மீதே செலுத்தி செலுத்தி தான் நல்லவன் எனவாக்கால் நிரூபித்து விடுகிறார்கள்". என்று இந்த ஜீவன் அதே குற்றம் குறைகளை தனது எனபாவனை செய்து உணர்கிறதோ அன்று அவன் ஜீவகளை களையப்பட்டு சுத்தாத்மா ஆகிவிடுகிறான்.

சிஷ்யன்:— அது எப்படி சாத்தியமாகும் குருதேவா?

குரு:— இதைக் கவனிக்குழந்தாய்! ஓர் சூக்ஷ்மமான உதாரணம். இந்த மாயா மனமானது ஏதேனும் "ஓர் நாமரூப குணத்தை நாடியே எழும். அதைப் பற்றியே ஆடும். அந்த நாமரூபம் அழிந்தால் வேறொன்றை பற்றி எழும் ஆடும். அதனை" **உணர்ச்சிகள்**" கொட்டிக் கொண்டு அதைப் பதிவேடாகப் பண்ணிக் கொண்டு வினைப்பெருக்கத்தை உண்டுபண்ணிக் கொள்ளும். "அங்கு அறிவுக்கு வேலை கொடுத்தால்"- அதாவது எல்லாம் இறைவன் உடைமையே என்றும் அனைத்தும் இறைவன் செயலே என்றும் உணரத்தலைப்பட்டால் அங்கு "புண்ணிய பாப கர்மா" தோன்றுவதில்லை. மையிருள் உன் கற்பனையின் மனமே தீக்ஷண்யமான புத்தி ஆகி அதுவே அறிவாக மாறிவிடும்.



உ

சிஷ்யன்:- எம் குருதேவா! இங்கு பத்தி எது? அறிவு எது? என்று எங்களால் உணரமுடியவில்லையே என் செய்வோம்?

குரு:- **"பொறுமை"** இல்லாததே காரணம். ஓர் சாதனையாளனுக்கு "பொறுமையும், ஓர்மையும்" (எதையும் ஒன்றுபடுத்துதலும்) அவசியம் தேவை.

பத்தியென்றால்:- நாமரூப மயக்கம்; அதில் ஆழ்ந்து விபரீத எண்ணங்களை ஓடவிடுதல். எதை எடுத்தாலும் சந்தேகம், பயம் துக்கங்களையே எண்ணி பார்த்து கவலுதல்.

அறிவென்றால்:— எல்லாம் இறைவன் உடைமையே; எல்லாம் இறைவன் செயலே; எல்லாம் நன்மைக்கே; என்ற ஓர்மையில் பயம் துக்கம் கலக்கம் இவைகளை முழுமையாக கடந்து ஆனந்தமாயிருத்தல்.

சிஷ்யன்:- ஆம் ஐயனே! நாமரூப மயக்கத்திற்கும்; அறிவோடு ஒன்றும் ஸ்திரத் தன்மைக்கும் சரிய விளக்கம் கொடுத்தாலிருந்து.

குரு:- எம் அரும் செல்வனே!

உடல் உலகம், நாமரூபம் எனமுதலில் தெளி. அவைகளின் குணங்கள் உன்மனதின் கற்பனையே யன்றி உண்மையல்ல எனத் தெளி. நம் தூல புண்ணிய பாப வினையின்படி அதற்கு விதிக்கப் பட்ட விதியானது விதிச்சாரப்படி பாரபக்ஷமின்றி ஒழுங்காக நடைபெறுகிறது எனத் தெளி. இப்போது யாம் கூறிய உடல், உலக, பொருளின், நாம, ரூப, குண, வினையின்படி, விதி, (இறைவன்) ஒழுங்காக நடத்துகிறான். "இவை மனதிற்கே யன்றி நமக்கல்ல"!

நாம் ஆனந்தமயம். நாம் ஆத்மா சொரூபம். நாம் பரமாத்ம சொரூபம். நாம் பரப்பிரம்ம சொரூபம்; நாமே பிரம்மானந்த சமுத்திரம் என உணர். "இவை அறிவு சொரூபமான நமக்கேயன்றி, இங்கு அன்னியமில்லை" என உன் உள்உணர்வால் உணர்ந்து கரைந்து மெய்மறவாயாக. முடிவாக!

குழந்தாய்! எல்லாம் வினையின்படி விதி இயக்குகிறதென்றும், அதுவும் அனைத்தும் இறைவன் செயலென்றும் **"முடிவாக"** தெரிந்தபின், நமக்கென என்ன இயக்கம் இருக்கிறதென்றும், "நம் பிரயத்தனம் ஒன்றுமே இல்லையென்றும்" பின் இந்த **"சாதனை"** எவர்க்கென்றும் கேட்கத் தோன்றுகிறதா? "ஓர் உணர்வுடன்" கதை கவனிப்பாயாக!



உ

குழந்தாய்! உன்னுடைய ஸ்வய சொரூபமான **"ஆத்மா"** என்ற இருப்புத் தன்மையை, உன் கவனக் குறைவினால் பற்றி இருக்கின்ற **"மனம்"** என்ற இந்த மாயையின் திரை மூடிக் கொண்டு, நான் **"ஜீவன்"** என சொல்லிக் கொண்டிருப்பதால், அத்திரையை நீக்குவதே **"சாதனை"** ஆகும்.

சிஷ்யன்:- குருதேவா! எல்லாம் ஈசன் செயலென்றும், நடப்பதெல்லாம் நாராயணன் செயலென்றும், அவனன்றி அணுவும் அசையாதென்றும், உரைக்கும் ஸத்திய வாசகத்தின்படி இந்த சாதனையையும் அவனே பார்த்துக் கொள்ளலாமே?

குரு:- (சிரித்துக் கொண்டே) அவன் அவசியம் பார்த்துக் கொள்வான். அப்படியானால் நீ யார்?

சிஷ்யன்:- யாம்! யாம்! என்று எதுவும் சொல்லமுடியாமல் திகைத்தான், பின் தெளிந்தான். குருதேவா யாம் ஆத்மாவே!

குரு:- நீயே ஆத்மா என்றால் அங்கு எந்த செயல்பாடும் இருக்க கூடாதே? உன்னிடம் செயல்பாடு காணப்படுகிறதே!

சிஷ்யன்:- சற்று ஆழ்ந்து சிந்தித்தான், ஆமாம் ஆத்மா என்றால் செயல்பாடு அற்றது தான், எம்மிடம் செயல்பாடு காணப்படுகிறதே, குருதேவா! யாமே **"இறைவன்"**

குரு:- சரி குழந்தாய் நீ இறைவன் தான் என்றால், உன்னிடம் **"சாட்சி"** பாவனை தானே இருக்கக் கூடும். ஆனால் அதற்கு மாறாக **"காட்சி"** பாவனை காணப்படுகிறதே. அதாவது குற்றம் குறை தெரிகிறது, பேதம் தோற்றுகிறது, விருப்பு வெறுப்பு தோற்றுகிறது, "குண தோஷங்கள்" காணப்படுகிறதே! உன் தாவத்தின் அம்மா, அப்பா, மனைவி, குழந்தை, உறவு சுற்றம், பொன் பொருள், "போக மோஹ வேகம்" காணப்படுகிறதே அப்படியானால் நீ இறைவன் எப்படி ஆக முடியும்?



உ

சிஷ்யன்:— ஆமாம் குருதேவா! இப்படி குற்றம் குறை குண தோஷங்கள் எம்மிடம் மிகுதியாக காணப்படுவதால் யாம் இறைவனும் ஆக முடியாது தான். இவைகள் ஒன்றும் இல்லாமல் அழிந்திடுமேயோ அந்த க்ஷணமே யாம் இறைவன் ஆக முடியும். அப்படியானால் யாம் "அறியாமையின் ஜீவனே"!

குரு:— எம் குழந்தாய்! உன்னை அப்படியும் அறியாமையின் ஜீவன் எனத் தவறாக கருதிவிடாதே. நீ அந்த ஸத்திய சொரூபத்தை உணர்ந்திடக்கூடும் ஓர் "பக்குவ ஆன்மாவே"! உன்னை ஓர் ஜீவனாக நீ கருதினால் உன் ஆன்ம சாதனைக்கு ஓர் பங்கம் ஏற்பட்டுவிடும். இதில் ஓர் முக்கியம் என்னவென்றால் உன்னை ஓர் ஜீவனாக தாழ்த்தவும் வேண்டாம்! உன்னை "நான், என்னல், என்னுடையது என்ற அஹங்கார அபிமானங்களால் உயர்த்தவும் வேண்டாம்". யாம் ஓர் "பக்குவ ஆன்மாவே என உன்னை சரிசமமாக்கிக் கொள்" இப்போதாவது சாதனை தேவையெனப்படுகிறதா? இன்னும் சாதனை எவர்க்கென சொல்லத் தோன்றுகிறதா?

சிஷ்யன்:— சாதனை செய்ய வேண்டியது அவசியம் தான் எனத் தோன்றுகிறது. ஆனால் இந்த சாதனை செய்வது யாரென்று நான் தெரியவில்லை.

குரு:— குழந்தாய்! இந்த உண்மையை உணர். தூலமும் நாம் அல்ல! உயிரும் நாம் அல்ல! மனம், புத்தி, சித்தம், அஹங்காரமும், நாம் அல்ல! ஆனால் இவைகள் அனைத்திற்கும் ஆதரவாயும் ஆதாரமாயும், ஆகாரமாயும் அமைந்த "சர்வ சாட்சித் தன்மையாகிய ஆத்மாவே நாம்". ஆனால் இந்த ஸத்தியமான உண்மையை உணரவொட்டாமல், தூலத்திலும், சூட்சுமத்திலும், காரணத்திலும் ஒட்டாததான ஒட்ட முடியாததான "நான், என்னல், என்னுடையது" என்று இந்த இல்லாத உலகத்தை இருப்புடையதாக ஆட்டி வைத்துக் கொண்டிருக்கும்;



“மாயா மனமே” ஓர் திரையாகும். அதுவே நாம் ஆத்மாவே என உணர வொட்டாமல் மறைத்திருக்கும் திரையாகும். இத்திரையை விலக்குவதே நம் சாதனையாகும். இந்த மனத்திரையை மனதின் கூர்ந்த தன்மையாகிய “அறிவால்” விலக்குவதே சாதனை ஆகும். இதை எப்படி சொல்வது என்றால் “உன் ஆசைவசப்பட்ட மனதை சீடனாக்கு. “கூர்ந்த புத்தியாகிய அறிவை குருவாக்கு” அங்கு உன் உபாசனாமூர்த்தியாகிய இறைவனை சாட்சியாக்கு” இவை உனக்குள்ளேயே நடைபெற வேண்டுமன்றி புறத்தில் இல்லவே இல்லை.

சிஷ்யன்:- நல்ல அறிவுபூர்வமான விளக்கம். குற்றவாளி, “மனம்”!
வக்கீலாகவும், ஜட்ஜ்மெண்ட் கூறும் ஜட்ஜாகவும், “அறிவு”!
இவ்விரண்டையும் சாட்சியாக கவனித்துக் கொண்டும்,
இவ்விரண்டையும் ஒன்றாக்கி அபேதமாக உணர்வது, “இறைவன்”!
இம்மூன்றையும் இல்லாததாக்கி அனைத்தும் அந்த காலாதீத ஒன்றே, “அது நலமே அது சுகமே” என ஆக்குவதும் அல்ல, ஏற்பதும் அல்ல, அது அதுவாகவே இருக்கும் “ஆத்மா”!
எம் குருதேவா! தாங்கள் எம்முள் இருந்து உணர்த்த யாம் உணர்ந்து, உங்கள் வாக்காகவே உரைத்த இந்த வாசகங்கள் பொருத்தமாக இருக்கிறதா?

குரு:- எம் அன்புருவே! நீ எம் குழந்தையாயிற்றே! உன்னுள் இருந்து பேசியதும் யாமே ஆகவே இவை அனைத்தும் சத்தியமே. குழந்தாய்! சாதனை என்பதே **சும்மா, சுகமாக இருத்தலேயாகும்!!**

சிஷ்யன்:- உங்கள் கூர்ந்த வாசகம் எதை உணர்த்துகிறதென்றால், பிராரப்தத்தின் படி தூலம் அவசியம் இயங்கத்தான் செய்யும். அப்படி இயங்கினால்தான் அத்தூலம் ஏற்ற கர்மா முடிவுறும். ஏற்று வந்த கர்மாவை முடிக்கவும் வேண்டும். ஆனால் புதிய கர்மா தொடராமல் கொஞ்சம் கண்காணிப்பாக இருக்கவும் வேண்டும். அதாவது சென்ற, வரும், நிகழ்கால கற்பனை எண்ணமும், நாம குண ரூப மயக்கம் இல்லாமலும், “நாம், இறைவன், பரம்” ஆகிய இந்த மூன்றையும் ஒன்றுபடுத்திய நிலையிலும் இருக்க வேண்டும்.



உ

குரு:- சும்மா இரு என்றால் என்ன பொருள் என ஸ்பஷ்டமாக உணர முடிகிறதா?

சிஷ்யன்:- உணர முடிகிறது குருதேவா! அதாவது

"எத்தொழிலைச் செய்தாலும் ஏதவஸ்தை பட்டாலும் முக்தர் மனம் இருக்கும் மோனத்தே!"

என்ற தங்கள் ஸத்திய வாசகத்தின்படி "இந்த தூலமானது நாம் ஏற்று வந்த கர்மாவை செய்கிறது என்றும், அதன் புண்ணிய பாபங்கள் இந்த ஆத்மாவை பற்றாது என்றும், உலகின் நிலையில் தூலம் ஓர் கருவியே என்றும், அனைத்து **"காட்சிகளையும்"** நாம் இறையென்ற **"சாட்சியாக"** மட்டும் இருந்து கொண்டு, எண்ண விகாரமின்றி (மெய் உணர்வோடு) இருக்க வேண்டும்" என்ற மெய்யறிவில் கலந்து எண்ணமற்று இருப்பதே, சும்மா இருக்கும் நிலையன்றி கர்மாவை நிறுத்துவதோ, கர்மாவிற்கு உறக்கம் கொடுப்பதோ சும்மா இருக்கும் நிலையன்று என உணர்த்திவிட்டீர்கள். அதாவது எந்த முயற்சியும் (எண்ண அழுத்தமும்) இன்றி இயல்பாக நடைபெறும் கர்மாக்களின் தராதரத்தை ஆராய வேண்டாம். அப்படி நடைபெறுவதில் மிகுந்த ஆனந்தமும், ஆழ்ந்த துக்கமும், சந்தேக, பயமும், வேண்டாம் என தெரிந்து கொண்டோம்.

குரு:- எம் செல்வமே இங்கு மற்றொன்றையும் குறிப்பிடுகின்றோம், கவனமுடன் கேட்பாயாக. அதாவது உடல் உலக சம்பந்தத்தில் ஈடுபடும் இந்த பொம்மையானது (உடலானது) மனம் என்ற புத்திவசம் கொண்டே ஆடுவதால், இயக்கம் அனைத்தும் பிராரப்தம் என உணர். அவைகளில் அந்த ஆறு துஷ்ட குணங்களும் அவஸ்யம் காணப்படும். உன் சாதனை என்பது உன் **"அறிவு"** ஒன்றே தவிர வேறு எதுவும் இல்லையெனவும் உணர். அந்த பிராப்தத்திலும் உன் அறிவு ஆங்காங்கே கண்காணிக்க வேண்டும். உன் கண்காணிப்பு எப்படி இருக்க வேண்டுமெனில் அந்த பிராப்த காலங்களிலும் "அதன் கர்மா தான் நிகழ வேண்டும்."



உ

அஃதுடன் அறியாமையால் தோன்றும்

# "காரிய நிமித்தமான"

வேகம், ஆத்திரம், அவசரம், மோஹம், தாபம், சந்தேகம்
ஆகிய இந்த அறுவரையும் "பொறுமையுடன்" இருக்கச்
செய்துவிட்டு அப்போதைக்கப்போது விலகச்
சொல்லி "கண்காணிப்புடன் இருப்பாயாக"!

சிஷ்யன்:- குருதேவா! இந்த வாசகம் புரியவில்லையே! மேலே கூறிய அறுவரையும் இருக்கச் சொல்கிறீர்களா?

குரு:- அப்படி அல்ல குழந்தாய்! ஓர் பழமொழி கேட்டதில்லையா? "காரியம் ஆகும் வரை கழுதையானாலும் காலைப்பிடி" என்ற பழமொழிப்படியும், முள்ளை முள்ளால் எடுத்துவிட்டு அம்முள்ளையும் சேர்த்து இரண்டு முள்ளையும் தூர எறிந்துவிடுவது போலும், இது கலி தோஷமாக இருப்பதாலும், அக்குணங்களே கர்மாவாக இருப்பதாலும், கர்மாவை அழிக்க வேண்டுமென்ற காரணத்தினாலும், "அக்குணங்களை உன் **"உடம்பில்"** வை. "இறை சொரூப குணங்களை எந்த நிலையிலும் தவறாமல் மறவாமல், அதிசிரத்தையுடன் உன் **"இதயத்தில் வை"**.

இதைத்தான் ஓர் அடியார் பாடினார்:- "பேசுவதும் பிதற்றுவதும் இங்கே" என்றும் "ஆசையும் நேசமும் அங்கே" எனவும் அதிரகஸ்யமாக சொல்லி வைத்தார்கள். இதில் எம் முடிவான வாசகம் என்னவென்றால் நன்றாக கவனி:- "காரிய சொரூபம் உலகம், உடல், பொருள் அதன் முடிவான கர்மா. (புண்ணிய பாபங்கள்)"

ஆனால் நீ தற்சமயம் அதை இயக்கும் "காரண சொரூபமான இறைவன்":- இந்த காரண சொரூபமான இறைவன் பற்றப்படாமல் "துன்பம் கபடு சூது வஞ்சனைகளை" அக்குணம் கொண்டே அழித்தான். குழந்தாய்! எம் போன்று ஆகவே

# "நடிக்கக் கற்றுக்கொள்"!

அதில் **"நான், என்னை, என்னுடையது,"** என **"மயங்கி, கலங்கி"** விடாதே. நீ எம் குழந்தை. மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்க வேண்டுமோ? [illegible]



உ

சிஷ்யன்:- இந்த மயக்கமாகிய கலக்கமே பலிதம் ஆகிவிடாதா குருநாதா?

குரு:- குழந்தாய்! எம்போன்று நீயும் "**பிராமணனே**"! பிரம்மத்தை உணர்ந்தவனே! நீ உன் இல்லாத (வினை) வாழ்வை நடித்து முடிக்கவந்தவனேயன்றி அந்தவாழ்வைத் தொடரவரவில்லை.

சிஷ்யன்:- நன்றி குருதேவா நன்றி! நன்றி குருதேவா நன்றி!! இந்த ஒருவார்த்தையும் உபசாரவசனமேயன்றி உண்மையல்ல! இந்த அளப்பரிய பெரிய உபகாரத்திற்கு இந்த வினை உடல் உங்கள் பொற் பாதகமலங்களுக்கு பாத அணியாக (செருப்பாக) போட்டு தேய்த்து, தேய்த்து, தேய்த்து, தேய்த்து, தேய்த்து, அதை இல்லாமல் பண்ணினாலும் அது மிகையாகாது.

குரு:- எம் அரும் செல்வமே! நீயே வே கூறிய மயக்கம், கலக்கம், துக்கம் பயம் இவை அனைத்தும் இல்லாமல் போக வேண்டுமானால் யாம் கீழே தரும் ஸத்திய வாசகத்தை உன் உள்ளத்தில் பதியவைப்பாயாக!

1. உடல் உலகம் பொருள்கள் "**காட்சி**" பாவனையாகும்!

2. உன் இறைவன் அக்காட்சிக்குள் நுழையாமல் அனைத்தையும் அணைத்து நின்றியக்கி கண்டானந்திக்கும் பேதமற்ற "**சாட்சி**" பாவனையாகும்!

3. ஆனால் நீயோ அந்த பந்தப்பட்ட உலகமும் அல்ல. அவைகளை ஓர் விளையாட்டார்த்தமாக தம்மாயையால் நடத்தும் இறைவனும் அல்ல. மேலே கூறிய இவ்விரண்டையும் சாட்சியாக பார்த்துக் கொண்டிருக்கும் சர்வசாட்சியின் "**அகண்டபாவனையும்**" அல்ல.

4. ஆனால் நீயோ உடல் உலக பொருள்களின் "**மேலே நீ**"!
ஆனால் நீயோ பேதமற்ற சாட்சியான இறைவனின் "**மேலே நீ**"!
ஆனால் நீயோ சர்வசாட்சியான அகண்டபாவனையின் "**மேலே நீ**"!

5. ஆனால் நீயோ காலாகாலம் கடந்த ஒன்று. கற்பனை கடந்த அற்புதநிலை. நாவாற்பெரிய "**நுண் அறிவு**" சொரூபமான ஒன்றை "**ஒரே நோக்கில் உணர்ந்த**" ஒன்றே நீ! அது நலமே! அது சுகசொரூபமே உனக்கினியும் பயமே இல்லை!



உ

சிஷ்யன் :— ஹே ஸத்குருவார்யா! தேவாதிதேவா
அகிலாண்ட கோடி பிரம்மாண்ட
நாயகா! ஆதிமத்யானந்த ரஹிதா!
ஜோதி நித்யானந்த சொரூபா! வாக்கு
மனதிற்கு எட்டாத பரம் பொருளே!
உம் மேன்மை எந்த வாக்கால் புகழ்வது?
அனைத்தும் நீயே! எல்லாம் நீயே! சர்வமும் நீயே! சகலமும் நீயே!
உன்னையல்லால் எமக்கு வேறு கதியும் இல்லை! உம் அமுத வாக்கால் யாம்
பரிபூரண நிலை பெற்றாலும் "உம்மை எம்முள்ளும் எம்முள் உம்மையும்"
"இணைத்தே" (அதுவைத பான்மையாக இருந்தாலும்) உணரும்
நிலை கூட்டி வைக்க வேண்டும். "வறட்சியான" அந்த சுத்த "அத்வைதம்"
எமக்கு வேண்டாம். கனிந்த கனியும் அக்கனியின் சுவையையும்
எப்படி "இரண்டாக பிரித்து காண முடியாதோ", ஆனால் கனியும் சுவையும்
"ஓர் உணர்ந்த, கனிந்த பாவனையில்,"
உணரவும் முடியும், சற்று விளக்கம் கொடுக்கவும் முடியும் என்ற தன்மையில்

"கனிந்த ஞானம்"

எமக்கு அருள்வாய். இல்லை இல்லை அக்கனிந்த ஞானமாக "நாம்"
"ஆவோம்" நீயன்றி யாம் யார்? எம் நினைவு யார்?
எம் நெஞ்சகம் யார்? தாயன்றி சேயும் உண்டோ"?????
என்ற நிலைப்படி "நீ எம் தாய், யாம் உன் கர்ப்பம்" காரணம்?
உம் உதரத்தை ("உம்மையே") உண்டு வளர்ந்தோம் யாம்!
ஆகவே அங்கு நீ வேறு அல்ல! யாம் வேறு அல்ல. மேலும் நம் இரண்டற
கலந்த நிலைக்கு "நீயே யாம், யாமே நீ, நாம் இரண்டும் ஒன்றுவே,
ஆகிவிட்டோம்" தேனின் மதுரம் போல் திகட்டிக்கொண்டே இருப்
போம்" குறிப்பாக:— எவ்வாறும் அந்த ஒன்றே என்றும். அதுவே பராபரம் என்று,
அந்த ஆத்மா வேறு நாம் என்ற "வறண்ட ஞானம்" வேண்டாம்.
ஸத்குருவும் ஸத்சிஷ்யனும் அனைத்தையும் தம்முள் அடக்கிக்கொண்டு அந்த
காலாதீதனென்றே ஆகி அங்கு "கனியும் சுவையும் போல இரண்டற்ற நிலையில்
வெறும் "கனிந்த ஞானமே" ஆகுவோம் என நன்றி முடித்துக்
கொண்டான். [signature]



உ

# "ஸத்குருவின் முடிவுரை"!!!

ஓம் அன்பின் சிகரமாயும், அறிவின் திருவுருவாயும், கனிவின் குழந்தைகளாயும், பணிவின் மழலைகளாயும், பண்பின் சேய்களாயும், சேவையின் தொண்டர்களாயும், அஹங்கார அபிமானமற்ற விவேகிகளாயும், தாய்ப்பறவையின் சிறகிற்குள்ளேயே அமர்ந்து, அஞ்ஞான குளிர் தாக்காமலும், கொடிய விஷயாதி குண நோய்களென்னும் பருந்துகள் தாக்காவண்ணம் அதியந்திரமாக இருந்துகொண்டு அப்போதைக்கப்போது "**பிரம்மானந்த தேன்**" பருகியவண்ணம் ஆனந்த மயமாகவே பிரகாசிக்கும் எம் அன்புச் செல்வங்களே!

இந்த முடிவை எப்படி முடிக்கிறேன் என்றால், வினை (கால) வசத்தாலும், விதி (மனோ) வசத்தினாலும் பிராப்தாதீனமாக உங்கள் காலம் சஞ்சாரம் செய்துகொண்டிருந்தாலும்,

1. காணும் காட்சிகளில் மயங்க வேண்டாம்.
௨. கேட்கும் வார்த்தைகளில் மிரட்சி (பயம்) வேண்டாம்.
௩. உங்கள் வாக்கில் அதிகாரம், அஹங்காரம், வேண்டாம்.
௪. ,, சரீரத்தில் அபிமானம், சூடு சுரணை, வட்கை, வெட்கம், வேண்டாம்.
5. உங்களுக்கு அன்னியமாய் எதையும் காண வேண்டாம்.

ஆனால்?

1. காணும் காட்சிகளில் இறை உணர்வு வேண்டும்.
௨. கேட்கும் வார்த்தைகளில் குருவாக்கை உணர வேண்டும்.
௩. உங்கள் வாக்கில் அன்பும் பணிவும் வேண்டும்.
௪. உங்கள் சரீரத்தை ஓர் (மண்) பொம்மையாக மதிக்க வேண்டும்.
5. எங்கும், எதிலும், எக்காலத்திலும், எந்நிலையிலும், எந்நிகழ்ச்சிகளிலும் எந்த காட்சிகளிலும் "**இறை உணர்வும்**" அடுத்து அதீதமான "**பர உணர்வும்**" அவசியம் வேண்டும்!



உ

காட்சிநிலை:- முன்பு கூறியபடி இவ்வுலக இயக்கம் வினை யென்ற தாவத்தைக் கொண்ட மனம் என்ற சூட்சுமக் கயிறுனது நடத்திவரும் ஓர் தொடர்பான மாயா நாடகம் என உணர வேண்டும். வினை இல்லாமல் மனம் இயங்காது என்றும், மனம் இயக்காமல் வினை (தாவம்) இயங்காதென்றும் முடிந்த முடிவாக உணர வேண்டும். இதனால் தான் இதை விதியின் வழியே மதி செல்லும் என்றும், வினை விதைத்தவன் வினையை அறுப்பான் என்றும், அன்று எழுதியவன் அழித்து எழுதப் போவதில்லை என்றும், உள்ளது தான் போகுமோ, பின் இல்லாதது தான் வருமோ என்றும்; எம் தலையில் இன்னபடி என்று எழுதிய இறைவன் இறந்தா போய்விட்டான் என்றும், வினைப் போகமே ஓர் தேகம் கண்டாய், வினைதான் ஒழிந்தால் தினைப்போதளவும் நில்லாது கண்டாய் என்றும், இன்னும் அனேக விதமாக ஸ்ரீ மஹான்கள் இத்தாவத்தையும், அதை இயக்கும் மனம் என்ற மதியைப் பற்றியும் அனேக விளக்கம் கொடுத்தார்கள்.

எம் குழந்தைகளே!

ஆகவே தான் எம் காட்சியிலும் வீழ்ச்சி ஆகாமலும் தாழ்ச்சி ஆகாமலும், இது வினைக்கும் விதி (மதி) யாகிய மனதிற்கும் நடக்கும் ஓர் "மாயா போராட்டம்" என்றும், எந்த நிலையிலும் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென யாம் சொன்னது,

**"இறைவுணர்வோடு காட்சியை"** அநுபவித்துக்கொண்டு **"நாம் அந்த பரமே என்ற பரவுணர்வோடு"** ஒன்றிகலந்திருக்க வேண்டும்.

காட்சிநிலை என்ற உடல் உலக பொருள்களை அழுங்கும் போது, கண்டிப்பாக **"உணர்ச்சிகளுக்கு"** அடிமை ஆகி விடக்கூடாது. அப்படி ஆளாக நேர்ந்தாலும் இரண்டொரு நிமிடமோ இரண்டொரு விநாடியோ. உடனே அதை உதறித் தள்ளிவிட்டு **"இறை உணர்வில்"** கலந்துவிட வேண்டும். அப்படி இருந்தால் தான் நாம் காட்சி நிலையை விட்டு சாட்சி நிலை பெற முடியும்.



உ

சாட்சி நிலை:— இது இறை நிலை, இது சம நிலை. இங்கு குற்றம் குறை காண முடியாது; குறைவு நிறைவு தெரியாது. விருப்பு வெறுப்பு இருக்க முடியாது. அனைத்தும் இறைவன் பொருள் என்றும் அனைத்தும் இறைவன் செயலென்றும் அனைத்தையுமே போதும் என்ற நிறைவோடு ஏற்கும் நிலை.

குழந்தைகளே! இங்கு ஒன்றை முக்கியமாக கவனிக்கவும். முன்பு ஓர் நேர்வு வந்தது. அதாவது ஓர் சாதனையாளன் "தன் லௌகீக காரியங்களை" எந்த குறைவுமின்றி மிகுந்த ஆர்வமுடன் செய்கிறான் என்றும், ஸ்ரீ குருதேவரை காணவோ, அவரின் குடிலுக்கு வரவோ ஓர் "**பொய் சாக்கு**" சொல்கிறான் என்றும் கவனித்தோம். அதாவது "அப்பா அழைக்க வில்லை" என்றும், "அப்பா உணர்த்த வில்லை" என்றும், சொல்வதாக ஓர் நிகழ்ச்சி வந்தது. அதற்கு விளக்கமும் கொடுத்திருந்தோம். அதன் நிலையில் இதையும் கவனிக்கவும்.

1. உலகிய லௌகீக கர்மா என்பது அவன் "பிராரப்த வினை". இது அவன் புத்தி (மனம்) பூர்வமானது. இதை நடத்தாமல் அவன் வினை தொலையாது. இது அவனை பலவந்தமாக வேலை வாங்கி விடும். இப்படி நடத்தி முடிக்கா விட்டால் இவ்வுலக இயக்கம் நின்று விடும்.

ஆனால்?

2. ஸத்கர்மாவாகிய மேலே சொன்னது இவன் **அறிவு** பூர்வமானது. இது பிராரப்தத்தையும் தாண்டியது. இது பிறவி நோயைத் தீர்க்கக் கூடியது. இங்கு இதை அறிவு தான் தாண்ட வேண்டும். இங்கு புத்தி "தடுக்குமே யன்றி அதை நடத்தாது". இங்கு அறிவு பூர்வமான "இவன் முயற்சி முதலில் வேண்டும். இவன் முயற்சி எடுத்தால் இறை குருவருளை கூட்டி வைக்கும்.

**"இது சற்று சிரமமான காரியமே"**

இங்கு இந்த சாதகன் இது நம் புத்தியின் (லௌகீக ஆசைகளின்) தடுப்பே யன்றி "இறையோ குருவோ" இதற்குக் காரணமில்லையென்ற "மெய் அறிவால் உணர்ந்து" திருந்த முயற்சிக்க வேண்டுமே யன்றி "**அப்பா**" மீதும் "**குடில்**" மீதும் பழியைப் போட்டு தான் தப்பிப்பது ஓர் முறை கேடான செயலாகும். இதனை உங்களில் நீங்களே மாற்றிக் கொள்கிறீர்கள். அத்தவறை உணர்க்க நீங்களே ஆதரவாக இருக்கிறீர்கள். அறிவியாம் இதை சொல்லக் கூடாது. சொல்லும் நிலைக்கு ஆராதித்துக் கொண்டிருக்கிறோம் தன்னை



உ

எம் அரும் செல்வங்களே!

இப்படி எழுதியதற்கு இவ்வைத்தியத்தை மன்னிக்கும்படி உங்கள் அனைவரின் ஸ்ரீமத்மாதாங்களிலும் சிரசாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து உங்கள் ஸ்ரீபாததூளியை எம் சென்னி சூடி பணிந்து எழுதினோம். இவ "உண்மைகளை உணர்த்தும் போது"

# "பணிந்துரைத்தால் தான்"

(நீங்கள் பயன் பெற முடியும், பலம் பெறவும் முடியும்)

ஓ அருட் கனிகளே!

உங்கள் அப்பழுகிய வைத்தியமும், அது இருக்கும் அன்பின் முடிவும், உங்கள் "**மனச் சாட்சி**"யேயன்றி உங்கள் "உடல், உலக, சொந்தபந்த பாச உறவு பணம், தொழில், பற்று வரவான, வினைக்கணக்கான" "**காட்சி**" ஆகாது எனப்பிரமாணமாகச் சொல்கிறோம். இங்கு "உங்கள் அறிவு" சிறிது முயற்சி செய்தாலும் பெரும் பலனை அடையலாம். ஆனால் "உங்கள் மனமாகிய புத்தி" (ஆசை, அவஸ்தை) வழியில் நின்றால் "பேரிழப்பு தான் உண்டாகும்." இங்கு உங்கள் மனம் கனியவில்லை, அதாவது "**பணியவில்லை**" ஏன், யாம் உங்களை சாட்சியாக பார்த்துக் கொண்டுதான் இருப்போம். "இங்கு மாயம், மந்திரம், எம் செயல்பாடு" எதுவும் இராது. ஆனால் தாவதாழும் ஆகுமேயன்றி எம் திருவடியை பற்றியவர்களை "**நம்பியவர்கள்**" எந்தநிலையிலும் கைவிடோம்.

ஆகவே எம் செல்வங்களே! காட்சியில் மயங்க வேண்டாம்! மனம் போனபோக்கில் போக வேண்டாம். ஓர் மஹான் சென்ற பாதையை மறக்க வேண்டாம்! உன் புத்தி வழி செல்லாதே. உன் அறிவுக்கு கொஞ்சம் வேலை கொடு. அவஸ்யம் நலம் பெறுவாய் இது ஸத்தியம். "அந்தகாவாதீத ஒன்றே நீ, அதுவேயாகு"!

பாபா.


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Adobe of Love
You are Everything!